
NA-1
1-5-

கவிஞர் உலகில் ஒரு புரட்சிப் பாதை!

ஈரோட்டுத் தாத்தா

கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்களின் கவிதை நூல். திராவிடத்தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் புரட்சிப்பண்பு, புத்துலகப்பாதை, நன்மதிப்புப் போர் ஆகியவைகளைக் கவிதையாழில் ஆசிரியர் அமைத்துக்காட்டி வெற்றிகண்ட இனியநூல். கற்பனைச் சுவை, கவிதை இன்பம், இவையனைத்தும் வடித்தெடுத்துத் தேனென இனிக்கும் செழுஞ்சொற்களால் பாடி இருக்கின்றார்.

கவிஞர் உலகில் ஒரு சுடர்மணியென ஒளிவிடும் இளங்கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்களை நன்கு அறிந்து பாராட்டுகிற திராவிடநாடு இன்புற்று மகிழ அரிய விருந்து இந்நூல்.

இது 'பொன்னி' வெளியீடு

விலை 0-4-0

தபால் செலவு 0—0—9

விற்பனையாளர்களுக்குக் கழிவு 25%

செந்தமிழ்ப் பதிப்பகம்

த. பெ. 39. — புதுக்கோட்டை



பொன்னி


பொருளடக்கம்

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

கவியரசர் பாரதிதாசன்
நாரா நாச்சியப்பன்
'ஊசி'
திருக்குறள் முனிசாமி
கோவை இளஞ்சேரன்
தமிழரசன்
'அததான்'
நக்கீரன்
டி. கே. சீனிவாசன்
கா. அப்பாத்துரை
நா. கி. நமசிவாயன்
இளமைப்பித்தன்
நா. வேத்தரசன்
நா. கிருஷ்ணமூர்த்தி

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

மலர்: 2 — திருவள்ளுவர் ஆண்டு 1979 சித்திரை, 1
இதழ்: 3 — 1—5—1948 : : விலை அணா



கொட்டு முரசே

பாரதிதாசன்

எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்ததென்று
கொட்டுமுரசே — வாழ்வில்
கட்டுத் தொலைந்ததென்று
கொட்டுமுரசே!

இல்லாமை என்னும்பிணி
இல்லாமல் கல்விநலம்
எல்லார்க்கும் என்றுசொல்லிக்
கொட்டுமுரசே — வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்ததென்று
கொட்டு முரசே!

சான்றாண்மை இவ்வுலகில்
தோன்றத் துளிர்த்த தமிழ்
மூன்றும் செழித்ததென்று
கொட்டுமுரசே — வாழ்வில்
ஊன்றிய புகழ் சொல்லிக்
கொட்டு முரசே!

ஈன்று புறந் தருதல்
தாயின்கடன்! உழைத்தல்
எல்லார்க்கும் கடனென்று
கொட்டு முரசே! — வாழ்வில்
தேன்மழை பெய்த தென்று
கொட்டு முரசே!

பொன்னி

தூத்துக்குடி நோக்கி!

வரும் மே-மாதம் 8, 9 தேதிகளில் தூத்துக்குடியில் திராவிடர் கழக மாகாண மாநாடு நடைபெற ஏற்பாடாகி வருகிறது. தமிழக முற்றும் இம் மாநாடு பற்றியே பேச்சு இருந்து வருகிறது. பொதுமக்கள் இம்மாநாடு நிகழ்வதை ஆவலோடு எதிர்பார்த்தவண்ண மிருக்கிறார்கள். மாநாட்டினை நடத்துவிக்கும் வரவேற்புக் குழுவினர் மிகச் சிறப்பான முறையில் திட்டங்களை, வசதிகளை விளம்பரப்படுத்தி வருகிறார்கள். குறிப்பாகத் திராவிடக் கழகத்தாருக்கும், பொதுவாக மற்ற திராவிட இனத்தவர் அனைவருக்குமே ஏன் மாற்றாருக்கும் கூட இம் மாநாட்டு நிகழ்ச்சி முக்யத்துவம் வாய்ந்ததாகத் தென்படுகிறது.

இச் சூழ்நிலைக்குக் காரணங்கள் உண்டு. திராவிடக் கழகத்தார் இழிவு நீக்க அறிகுறியாகக் கருஞ்சட்டை அணிந்திருப்பதைத் தவறாக எண்ணி 'அவர்களும் படையினரே' என்று கருதித் தடை விதித்துச் 'சோதனைப் படலம்' நடத்திக் குற்றஞ் சாட்ட யாதொன்றும் கிடைக்காது போகவே, என்ன செய்வதென்றறியாது குழப்பமடைந்திருக்கின்றனர் அரசாங்கத்தார். அதுமட்டுமின்றிப் பார்ப்பனர்சூழ்ச்சியும் வஞ்சக இயல்பும் காந்தியார் மறைவுக்குப் பின் சிறிதும் ஐயமின்றி வெட்டவெளிச்சமாகி விட்டபடியால் பொது மக்களிடையே கட்சி, முதலிய வேறுபாடுகளையும் மீறிப் பார்ப்பனியத்துக்கு எதிராக, வகுப்பு வாதத்திற்கு எதிராக ஏற்பட்டுள்ள எழுச்சியும் தூத்துக்குடி மாநாட்டை முக்கியத்துவம் பெறச் செய்திருக்கிறது. மற்றும் ஓமாந்தூரார் வெற்றியும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியினரிடையேகூட ஏற்பட்டுள்ள 'இன உணர்வும் 'திராவிடக் கழகம்' என்பது தனிப்பட்ட கட்சியாக இல்லாமல் 'எங்கும் நிறை நாதமாய்' ஆகிவிட்டதாலும் தூத்துக்குடி பெருமைபெற்றதாகிறது. வெள்ளையர் வெளியேறிய பிறகு காங்கிரஸ் 'ஏகபோக' ஆட்சி நடத்திவருகிறது. அதை எதிர்த்துநின்ற 'முஸ்லிம்லீக்' பாகிஸ்தான் உதயத்தில் அஸ்தமனமாகிவிட்டது. சோஸியலிஸ்ட்டுகள் என்போர் 'நேற்றுப் பிறந்த குழந்தைகள்' என்பதுமட்டுமின்றிக் காங்கிரஸை எதிர்ப்பதைவிடத் தழுவுவதையே ஏற்பவர்களாக விளங்கி வருகின்றனர். மேலும் அம்பேத்கார்போன்ற மிகப் பெரிய தலைவர்களே சலிப்படைந்து 'சமரச வாதியாக'மாறிச் சரணாகதியடைந்திருக்கிறார்கள். அண்டி ஆதரவு தேடு

வதைத் தவிர வாழ்வுக்கு வேறு வழியில்லை என்று பலரும் முடிவுகட்டி விட்டனர். இந்நிலையில் திராவிடர்கழகம் 'தனி நாடு' கேட்கிறது - எதிர்ப்பு முன்னணி அமைக்கிறது. அதனால்தான் 'தூத்துக்குடி' எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் அங்கே லட்சக்கணக்கில் கூட இருக்கிறார்கள்.

தூத்துக்குடி மாநாட்டுக்கு நம் இயக்கங்கண்ட தந்தை, பெரியார் அவர்களே தலைமை தாங்கப்போவது பெருமைப் படுவதற்குரியதாகும். சுயநலமிகளும், நாடகத்தில் மட்டும் ராஜாவேஷம் போடுபவர்களைப்போல மாநாட்டுக்கு மட்டும் தலைவர்களாக வந்து மற்ற நேரங்களில் உறங்குவோரைத் தலைவர்களாக ஏற்காது, எந்நேரமும் இயக்க வளர்ச்சியில் கருத்துக்கொண்டு திராவிடக் கழகமாகவே இயங்கும் பெரியார் அவர்களைத் தலைவராகத் தெரிந்தெடுத்தது மிக மிகப் பொருத்தமாகும். தோழர்களின் எண்ணத்தை உருவாக்கும் முறையிலே முடிவுசெய்த வரவேற்புக் குழுவினரைப் பாராட்டுகிறோம.

திராவிடக் கழகம் செய்த, செய்துவரும் வேலைகள் நன்கு பயனளித்து வருகின்றன. மேடைப் பேச்சளவில் கிராமம் கிராமமாக ஆங்காங்கு பிரசாரங்கள் நடைபெறுவதோடு, அக் கொள்கைகளை முன்னணியிற் கொண்டுள்ள பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியன வேறு நிறைய வெளிவருவதால் 'பிரசாரம்' வலுப்பெற்று வருகிறது. நாடகம், சினிமா முதலிய கலைத்துறைகளிலும் நம் கொள்கைகளுக்கே ஆக்கம் அதிகம் ஏற்பட்டு, மக்கள் இதனையே விரும்புகின்றனர் என்று தெரிந்தவுடன், துறையில் ஆதிக்கம்கொண்டுள்ள பிற கட்சியினரும் திராவிடக் கழகத்தை நோக்கித் திட்டமிடுகின்றனர். இவ்வாறு பெருத்த ஆதரவுள்ள சூழ்நிலை நமக்கிருக்கிறது; இதனைப் பலமடங்கு பெருக்கிக் கொள்ள, இன்னும் பிணங்கியுள்ளாரை இணங்கச் செய்ய, திராவிட் இனத்தவர் அனைவரும் ஒன்றெனனும் முரசெழுப் பத் தூத்துக்குடி பயன்பட வேண்டுமென்பதே நம் ஆசை.

மக்களிடையே ஆதரவிருக்கிறது, எழுச்சியிருக்கிறது என்றாலும் சில இக்கட்டுகளும் நம்மை எதிர்நோக்கியிருக்கின்றன. அரசியல் நிர்ணய சபை இந்திய அரசியல் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறது. அது நிறைவேறி நடைமுறைக்கு வருமானால் திராவிடத்தின் வாழ்வில் இப்போது காணப்படும் ஒளியைக்கூடக் காண்பதரிது; எத்துறையும் தேய்மானக் கணக்கா யிருக்குமேயொழிய வளம்பெருக வழியிராது. அயலார் சுரண்டல் சட்டப்படி நடைபெறும். திராவிடநாட்டுப் பிரச்னையே சட்டத்திற்கு எதிர்ப்பாகும்; இந்திய அரசியல் திட்டம நிறைவேறிய பின்பு பிரிந்துபோவது முடியாது; தடுக்கப்படும் - குற்றமாகக் கருதப்படும். இதனை நாம கருதிப்பார்க்கத் தூத்துக்குடி இடமளிக்கவேண்டும்; இதனை எப்படிச் சரிக்கட்டுவது, சமாளிப்பது என்பதற்குத் திட்டம் திட்டப்பட வேண்டும் அங்கே.

றிவது. 'சாதியொழிப்பு' என்று கூறிக்கொண்டு அரசினர் கண்ணில் மண்ணைத் தூவி வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கத் திட்டமிடுகின்றனர் எதிரிகள். சென்னையமைச்சர்கள் இச் சூழ்ச்சிக்கு இரையாகமாட்டார்கள் என்று நாம் திண்ணமாய் நம்பினாலும் 'மேலிடம்' இச்சூதுக்கு ஆட்பட்டுவிடும் என்றே நாம் அஞ்ச வேண்டியிருக்கிறது. அப்படியொரு முடிவு ஏற்பட்டுவிடுமானால் மீள முடியாத பாழ்நிலைதான் நமக்குக் கிடைக்கும். இப் பொல்லாங்கு நேருமுன்னர், பலமான முன்னேற்பாடுகளும் திட்டங்களும் நடந்தாக வேண்டும். 'சாதியொழிப்பு' நிறைவேறாமுன வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நீங்காது என்பதை எதிரிகள் உணரும்படி செய்யவேண்டும். திராவிடர் கழகத்தார்' வகுப்புவாதிகள் என்ற பிரசாரம் எதிரிகளால் பலமாக நடைபெற்று வருகிறது. திராவிடக் கழகத்தையே சட்ட விரோதமாக்க வேண்டுமென்றுகூட அரசினருக்குச் சிபார்சுகள் நடைபெறுகின்றன. இந்த இக்கட்டினின்றும் மீளத் தூத்துக்குடி திட்டம் தரவேண்டும்.

இவை போதா என்று இந்தியும் வால் நீட்டுகிறது. பெடரல் பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீட்சைக்கு இந்தி கட்டாயப் பாடமாம். நம் மாகாணத்தில் வரும் ஆண்டு முதல் ஆறாம் வகுப்பிலிருந்து இந்திப் பயிற்சி தொடங்கப் போகிறார்களாம். இந்தியா, இந்துஸ்தானியா என்று முடிவு கட்டவில்லை. இந்துஸ்தானியானாலும் அரபு எழுத்தா, தேவநாகரி எழுத்தா என்று உறுதி செய்யவில்லை. அதற்குள்ளே இந்தியைப் படிப்பிக்கத் திட்டங்கள் வெளியாகின்றன. இந்தி வருமானால் "நாடு போர்க்களமாகும்" என்று காட்டவேணடும. அதற்கேற்ற அணிவகுப்பு அமைக்கப்பட வேண்டும். இதனையும் தூத்துக்குடி மாநாட்டில் காண விழைகின்றோம்.

தூத்துக்குடி, மறத்தமிழர் வ. உ. சிதம்பரனாரை நமக்கு நினைப்பூட்டி நிற்கிறது. வெள்ளையரை எதிர்த்து நின்று கப்பலோட்டிய அவர்தம் திறமும் திண்மையும தூத்துக்குடியில் நாம் பெறப் போகிறோம். இன உயர்வுக்காக, மேம்பாட்டுக்காக எத்தகைய துயரினையும பொறுக்கவல்லோம் என்று எண்ணற்ற தொண்டர்கள் அங்கே ஒலியெழுப்பப் போகின்றனர். 'அண்ணா' வருகிறார் அணிவகுப்பில் முன்னிற்க! தமிழ்த் தென்றல் கல்யாணசுந்தரனார் உலக உத்தமரின் உருவப்படத்தை அலங்கரிக்க இருக்கிறார்! நம் அனைவரையும் தூத்துக்குடி அழைக்கிறது! இரு கையேந்தி வரவேற்கிறது! புறப்படுங்கள் தூத்துக்குடி நோக்கி!

திராவிடம் வாழ்க!

செய்திப்பாட்டு

ஓமந்தூர்

சட்டசபைக் கட்சிக்குத் தலைவர் தேர்தல்
சடுதியிலே நடக்குமெனச் செய்தி கேட்டேன்
பட்டதென்றன் மனதினிலே பார்ப்பான் சூழ்ச்சி
பலிப்பதற்குச் சமயந்தான் வாய்த்த தென்றே!
கெட்டவர்கள் எத்தனைதான் செய்வ ரேனும்
கெடுவதில்லை பெரியரெனும் உண்மை காட்டிச்
சட்டசபைத் தலைவரானீர்! எங்கள் உள்ளம்
தழையவைத்தீர்! திராவிடத்தைத் தழைய வைத்தீர்!

வெற்றிபெற்றார் ஓமந்தூர் என்று கேட்டு
வின்இடிய மக்களெலாம் வாழ்த்தக் கண்டேன்!
கற்றறிந்தார் ஆரியந்தான் விழ்ந்த தென்று
களிப்படைதல் கண்டேன்!என் கவிதை வெள்ளம்
முற்றிஒரு ஆறாகிப் பெருகக் கண்டேன்!
முன்னேறும் திராவிடத்தின் முகத்தில் இன்பம்
பற்றிஎங்கும் படர்ந்திருத்தல் கண்டேன்! எங்கும்
பரவியுள்ள மகிழ்ச்சிவெள்ளம் கண்டேன்! கண்டேன்!

ஓமந்தூர்ப் பெரியாரே! இராம சாமி!
உமக்கென்றன் வாழ்த்துக்கள்! திரா விடத்தில்
நாமன்றி வேறொருவர் நம்மை யாள
நடைபெற்ற சூழ்ச்சிகளை முறியடித்தீர்!
நேர்மைக்கும் ஒழுங்கிற்கும் கட்டுப் பட்டால்
நினைத்தபடி ஏமாற்றி உடல் வளர்க்க
நாமறியோம் எனநினைத்த தாலே யன்றோ
நஞ்சுடைய நெஞ்சினர்கள் சூழ்ச்சி செய்தார்!

ரர் வாழ்க!

குடுமிவைத்த தலையினரும், வால் பிடிக்கக்
கூசாத நம்மவரும், உமை ஒழிக்க
நடத்திவைத்த சதிச்செயல்கள் தந்தி ரங்கள்
நம்நாட்டில் இனிநடவா தென்று காட்டிப்
படுதோல்வி அவரடையப் பண்ணி வைத்தீர்!
பாராள்வோர் தமிழரெனக் காட்டி விட்டீர்!
விடவேண்டாம்! இனிநரிகள் உயர் வடைய
விடவேண்டாம்! திராவிடர்கள் விழித்து விட்டோம்

விழ்ந்துவிட்ட அன்னாரின் உள்ள மெல்லாம்
வெந்திருக்கும்! நொந்திருக்கும்! இனிமேல் உம்மைப்
பாழ்படுத்தத் திட்டமிடும்! அறிந்த தேதான்!
பயம்வேண்டாம்! உம்வாழ்வு திராவி டத்தின்
வாழ்வன்றோ? உமைக்காக்க நாங்க ளுண்டே!
வஞ்சகத்தைச் சூழ்ச்சிகளைப் பொறுமை தன்னை
ஆழ்ந்தகுழிக் குள்புதைத்த அண்ணல்! எங்கள்
அகங்குளிர வாழ்த்துகிறோம் வாழ்க! வாழ்க!

இனிநமது திராவிடத்தை ஆரியத்தின்
இடர்சேர்க்கும் உறவகற்றித் தனிநா டாக்க,
நனிபெரியார் ஈரோட்டு இராம சாமி
நாடுகின்ற படிபிரித்தல் தேவை யாகும்!
நினையளவும் இதுவரையில் உங்க ளாலே
திராவிடர்க்குப் பயனில்லை! இனிமே லேனும்
மனந்தெளிவீர்! திராவிடத்தின் தேவை நாடிச்
செயல்புரிவீர்! மாபெரியீர்! வாழ்க நன்றே!

— நாரா. நாச்சியப்பன்



காலமும் கருத்தும்

மாதம் இருமுறை

இந்த இதழ் முதல் 'பொன்னி' மாதம் இருமுறையாகவெளி வருகிறது. இச்செய்தி நம் அன்பர்களை மகிழ்ச்சிக் கடலில் திளைக்கவைக்குமென்று நம்புகின்றோம். ஏற்கனவே எண்ணற்ற அன்பர்கள் இம்மாறுதலை வரவேற்று வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைக்கூற விரும்புறோம். மாதம் இருமுறையாவதில் 'பொன்னி' அன்பர்கள் அடிக்கடி 'பொன்னி' யைக் காணும் வாய்ப்புப் பெறுவதோடு மட்டுமின்றி முன் கொடுத்ததைவிடக் குறைந்த விலையில் வழக்கம்போலப் பெற்றுவந்தகதை, கட்டுரைகளில் சிறிதும் குறைவின்றியும் பெறப்போகிறார்கள். 'பொன்னி' யின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டும் அன்பர்கள் எங்கட்கு அடிக்கடி ஆலோசனைகள் கூறுவதோடு 'பொன்னி' யைத்திக்கெட்டும் பரப்பஉதவி, நம்மவர்களின் பெருமைக்கும் திறமைக்கும் எடுத்துக் காட்டாய் இலங்கும் 'பொன்னி' யை வளர்த்துப் பெருமையைக்கட்டிக் கொள்ள வேண்டுகிறோம்.

திராவிட பத்திரிகையாளர்கள்

'விடுதலையும்' 'குடியரசும்' தவிர்த்து வேறுபத்திரிகை இல்லை என்ற நிலைமாறி, நாற்பதுக்கு மேற்பட்ட இதழ்கள் திராவிடக், கொள்கையைத் தாங்கி வரத்தொடங்கியுள்ளன. எதிர்க் கட்சியினரின் ஏடுகளுக்கு எவ்வகையிலும் தாழ்வில்லை என்ற முறையிலும் இணையற்ற வகையிலும் திராவிடப் பத்திரிகை உலகம் வளர்ச்சி பெற்று வருவது மகிழ்ச்சிக்குரியதே. இவ்வளர்ச்சி நிலைபெற்றதாக விளங்க ஏடுகளிடையே இணைப்பு அவசியம். அந்நோக்கத்தோடு திராவிடப் பத்திரிகையாளர் கழகம் தொடங்கப் பெற்றிருக்கிறது. ஆரியப்பத்திரிகை யுலகம் தம் இனப் பாதுகாப்பிற்கு அத்தனை வசதியையும் ஈடுவைக்கிறது. அவ்வாறே திராவிட இன எழுச்சியிலும் உயர்விலும் பெரும் பங்கு பத்திரிகையாளர்களால் நிறைவேறிற்றென்று பிற்காலத்தில் கூறுமாறு திராவிடப் பத்திரிகையாளர், எழுத்தாளர் பணியாற்ற வேண்டுகிறோம்.

மே தினம்

தொழிலாளர்களின் பெருநாளாக எல்லாநாடுகளிலும் கொண்டாடப்பட்டு வரும் மேதினம் சில ஆண்டுகளாக நம் நாட்டில் கொண்டாடப்பட்டுவருகிறது. இவ்விழாவினை 'இக்கட்சியினர்' தான் நடத்தவேண்டுமென்றில்லாது தொழிலாளர் முன்னேற்றத்தில் கருத்துக் கொண்டுள்ள அனைவரும் மேதின விழாவில்

பாகு பெறவேண்டும். இந்திய அரசியலார் மேதினத்தைப் பொது விடுமுறையாகக் காது, தட்டிக் கழிக்கும் முறையில் வேறொரு நாள் வேலை செய்வதானால் விடுமுறையுண்டு என்ற முறையில் அறிக்கை விட்டிருப்பது அழகல்ல. வரும ஆண்டுகளிலேனும் மேதினம் பொதுவிடுமுறையாகத் திகழும்படி செய்ய வேண்டுகிறோம். எங்கும நீக்கமற நிறைந்துள்ள பாட்டாளி மக்களுக்கு எம மேதின வாழ்த்தினை மனமுவந்து கூறுகிறோம்.

புரட்சிக் கவிஞர் விழா

சென்ற ஏப்ரல் 29 புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் பிறந்த நாளாகும். தன்மான இயக்கம் தமிழர்க்குத் தந்த பெருஞ் செல்வமாக விளங்கி, எண்ணற்ற இளைஞர்களைக் கவிதைத் துறையில் ஊக்கும் கவியூற்றாக இலங்கி, துருப் பிடித்துப் போயிருந்த தமிழ் இலக்கியத்திற்குப் பாரதிவழியில் புத்திலக்கியம் கண்டு, தமிழகக் கவிஞர்களிடையே ஈடும் எடுப்புமற்று விளங்கும் புரட்சிக் கவிஞருக்கு இந் நாளில் நம் வாழ்த்தினைக் கூறுகிறோம்; புதிய புதிய இலக்கியங்கள் இன்னும் பல தரும்படி தமிழ் மக்கள் ச்ர்பாக வேண்டுகிறோம்.

பாரதி பாடல்

பாரதி பாடல்களின் உரிமைகள் சிலரிடம் சிறைப்பட்டுப் போயிருக்கின்றன. பொதுமக்களுக்காக வாழ்ந்த பாரதியின் இலக்கியம் தனிப்பட்டோரின் சொத்தாக மாறிவிட்டது. அவர் வாழும் காலத்தில் திரும்பிக் கூடப் பார்க்காத பலர் இன்று அவருக்கு விழா எடுக்கவும் மண்டபம் அமைக்கவும் தொடங்கி யுள்ளனர். அதே போன்று பாரதி நூல்கள் பெற்றுள்ள செல்வாக்கைக் கண்டு அவற்றைக் கொண்டு பிழைப்பு நடத்த எண்ணும் பலர் பாரதி பாடல்களைத் தமக்கே உரிமையாகக் கொண்டு மற்றவர்கள் அதனைப் பயன்படுத்தாது தடை செயது வருகின்றனர். இந்த அநீதிக்கு எதிராக டி.கே.எஸ்.சகோதரர்கள் போர்முரசம் எழுப்பியுள்ளனர். அவர்களின் 'பில்ஹணன்' படத்தில் பாரதி பாடலைப் பயன் படுத்தியுள்ளனர். வழக்கு நடைபெறுகிறது. அதற்கிடையில் அரசினரும் பொதுமக்களும பாரதி இலக்கியம் பொதுவுடமை யாவதை விரைவு படுத்தவேண்டும்.

மறைவு

திருவாரூர்த் தோழர் மு. கருணாநிதி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் பத்மாவதி அவர்கள் இயற்கை எய்தியது குறித்துத் துயர்க்குள்ளானோம். தோழர் கருணாநிதியார் ஆறுதல் பெற வேண்டுகிறோம்.

:அட்டைப் படம்:

"கட்டிக் கரும்பே! கனியே இன்பக் கவியமுதே
வட்ட நிலவு வருமுன் வருவேன் வருந்திடே'' லென்(று)
எட்டி நடந்தார்ஏன் இன்னும் வரவில்லை என்றுருகிக்
கட்டுக் குலைந்தாள்! நிலவைத் தீ என்று கடிந்தனளே!

கவிஞர் பிர்தாசி

தென்னாப்பிரிக்கா டர்பன்
திரு. எ. மு. பிள்ளை

பிர்தாசி பாரசிகத்தின் பெரும் கவிஞர். இசைவாணரும் கூட. மிகப் பழையதாக எண்ணப்படும் ஷாஹ்நாமா என்னும் நூலின் ஆசிரியர் இவர்தான். பிர்தாசியைப் பாரசிகத்து வால்மீகி என்றும் அழைப்பதுண்டு. அவர் இந்நூல் எழுதி, ஆயிரம் ஆண்டுகளாய் விட்டபோதிலும் பாரசிகத்தில் அது இன்னும் புகழ் பெற்றதாகவே இருந்து வருகிறது.

பிர்தாசி கி.பி. 941-ம் ஆண்டில் பிறந்தார். அவர் தமது 35-வது வயதில் இந்நூலை எழுதத் துவங்கினார். அதை எழுதி முடிக்க முப்பத்தாறு ஆண்டுகள் ஆயின. ஷாஹ்நாமா என்னும் இந்நூலுக்கு வேண்டிய குறிப்புகள் டிகிகி என்பார் எழுதிய ஒரு நூலிலிருந்தன. டிகிகி மிகுந்த இளமைக் காலத்திலேயே இறந்துவிட்டார்.

பிர்தாசிக்கு முதலில் உள்ளூர்ச் செல்வரான மன்சூர் என்பவர் ஆதரவளித்தார். மன்சூரை யாரோ கொலைசெய்துவிட்டார்கள். பிர்தாசி முதலில் எழுத்தாளராகப் பயிற்சி செய்யப்பட்டார். சிறுவயது முதலே கவிதைகள் எழுதத் துவங்கி விட்டார்! அவர் இறந்து நூறு ஆண்டுகளுக்குப் பின் அவரைப்பற்றி நைஜாமி என்பவர் எழுதியிருக்கிறார். பிர்தாசியின் உண்மைப் பெயர் அபுதுல் காசிம என்பது. அவர் ஒரு மிராசுதார் என்றும் சொந்தத்தில் சொத்து இருந்ததென்றும் நைஜாமி கூறுவதிலிருந்து தெரிகிறது.

பிர்தாசி இயற்றிய ஷாஹ்நாமா உலகத்திலுள்ள பெருங் காப்பியங்களில் ஒன்றாகும். இந்நூல் அராபி மொழி கலவாத "தூய" பாரசிக மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. பாரசிகத்தை மகமதியர்கள் வென்ற வரையில் அந்நாட்டின மக்களைப் பற்றியும், நாட்டைப்பற்றியுமே அக்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. வரலாறு, சமயம் முதலியவற்றிலிருந்து இதற்கு ஆதாரங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இக்காப்பியம் வெறும கற்பனையல்ல. 3874 ஆண்டுகளைப் பற்றியும் 49 அரசர்களைப் பற்றியும இந்நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிர்தாசி இவைகளை இணையற்ற அழகிய பாரசிக மொழியில் பாடினார். இதற்குவேண்டிய ஆதாரங்களைத் தேட அவர் பெரிதும் முயன்றிருக்க வேண்டும். இதன் கற்பனைகள் யாவும ஸௌராஷ்டிரியன சாத்திரங்களிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன.

பாரசிகம் முழுதும் இக்காவியத்தைக் கொண்டாடுகிறது. "நான் எழுதியிருக்கும் இக்காவியத்தில் நான் உயிர்வாழ்வேன். எனக்கு இறப்பில்லை" என்று பிர்தாசி சொல்லியிருக்கிறார்.



வள்ளுவர் விருந்து

3. அழுவது ஏனோ?

திருக்குறள் முனிசாமி

அவைகள் அழுகின்றன. இவள் சிரிக்கின்றாள். அந்தக் கண்களுக்கு ஓயாத துன்பத்தைத் தந்து தலைவன் பிரிந்திருக்கின்றான். கண்ணுக்கினியனைக் காணாத கண்கள் அழுதவண்ணம் நீர் சொரிகின்றன. அவைகளைக் கண்டு நாம் பரிதாபப்படுகின்றோம். யாரும் பரிதாபப்படுவர். ஆனால், அந்தக் காதலியோ சிரிக்கின்றாளாம். 'தன்னுடைய கண்களைக் கண்டே அவள் ஏன் சிரிக்கவேண்டும்' என்பது நமக்கு வியப்பாகத் தான் தோன்றுகிறது. நயமாக விளக்குகின்றார் ஆசிரியர் வள்ளுவனார்.

சிரிப்பு உண்டாவதற்கு அநேக காரணங்கள் உண்டு. அது சிரிப்பவர்களின் அவ்வப்போதைய மனோநிலையைப் பொறுத்திருக்கின்றது. கோபத்தில் சிரிப்பவர்களும் உண்டு. அது ரொம்பவும் ஆபத்தானது தான். மகிழ்ச்சியில் சிரிப்பவ களும் உண்டு. இது இயற்கை சிலர் எப்பொழுதும் சிரித்து கொண்டே இருப்பர். அவ களைத் தான் பைத்தியங்க என்கின்றோம். பிறரைக் கே செய்து நையாண்டியாக பேசிச்சிரிப்பவர்களும் உண்டு இந்த மாதிரியான ஒரு சந்தர் பத்தில் நாயகியின் மனப் போ கினைக் காட்டிப் புத்தம் புதி கருத்தினை ஆசிரியர் வள்ளுவ னார் நமக்கு இங்கே தருகின்றா

பிரிந்த நாயகன் வாராததால் ஏக்கங்கொண்ட நாயகி இர பகல் உறக்கமின்றி வதங்கி கிடக்கின்றாள். பெண்களுக்கு இயற்கையாக இருக்கும் குண அவளைவிட்டுமட்டும் போகுமா சதா அழுது கொண்டே இருக் கின்றாள். வாடிய உள்ளத்தின் செயல் அந்த நிலையில் அவளை இருக்கச் செய்கின்றது. நாய கன் வரவை எதிர் நோக்கி ஏமாற்றமடைந்து கொண்டிருக்

என்ற அவளுடைய கண்கள் நீரைச் சொரிந்த வண்ணம் இருக்கின்றன. இவ்வித சந்தர்ப்பதில் அழகிய கற்பனைச் சரக்கை அமைத்துக் அமைத்துக் காட்டி. ஆசிரியர் நம்மை அப்படியே கவர்ந்து விடுகிறார். கண்களைப் பார்த்து நாயகி பேசுகின்றாள். வெறும் பேச்சுமட்டுமல்ல. நையாண்டி செய்கின்றாள். நகைப்புக்கிடமாக நடந்து கொள்ளுகின்றனவே என்று பரிகசிக்கின்றாள்.

தானும் இன்பக்காதலனும் முதன் முதலில் சந்தித்த நிகழ்ச்சிகளை நாயகி நினைவுக்குக் கொண்டுவந்து அவைகளைத் தனது கண்களுக்குச் சுட்டிக் காட்டி உண்மையினை உணர்த்தி விடுகின்றாள். இந்தமுறைகளில் கண்ணிற்கும் நாயகிக்கும் நடைபெறும் இச்சிறு நிகழ்ச்சியினை ஆதாரமாகக் கொண்டு கற்பு நிறைந்த நாயகியின் உள்ளப் பாங்கினையும் இன்ப வேகத்தினையும் ஆசிரியர் எளிமையாக உணரும்படி செய்துவிடுகிறார். ஆசிரியர் அமைத்த கற்பனையுடன் அந்தக் காதலியின் உள்ளப் போக்கினையும் உட்கொண்டு அவளுடைய கண்கள் செய்த-செய்கின்ற வேலை மிகச் சிறிய வடிவில் காட்சியளிக்கின்ற குறட்பா விளக்கிவிடுகின்றது. கொஞ்சம் விசாலப்படுத்திப் பார்ப்போம்.

"கண்களின் இவ்விதமான செய்கை நகைப்புக்குத்தான் இடந்தருகிறது" என்று நாயகிக்குச் சொல்லத் தோன்றுகிறது. பழக்கத்தில் சிலர் செய்கிற முன்னுக்குப் பின் முரணான செய்கைகளைப் பார்த்தால் "இது என்னப்பா! யாராவது பரிகசிக்கப்போகிறார்கள். ஏன் இப்படிச் செய்து கொண்டிருக்கின்றாய்?" என்று சர்வசாதாரணமாகக் கூறுகிறோம். நாயகியும் எந்நேரமும், அழுது கொண்டேயிருக்கின்ற தனது கண்களைப் பார்த்து 'இது நகத் தக்கது உடைத்து' (இந்தக் கண்களின் செய்கை நகைப்புக்கு இடந்தருகிறது). என்கின்றாள் மிகச்சாதாரண சொற்களில் நாயகியின் வாக்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

கண்கள் கலக்கமுற்று அழுவது உண்மைதான். நீண்ட நாட்களாக நாயகனைக் காணவில்லை என்பதே காரணம். அவைகள் அழுவதைக் கண்டு நாயகி நகைத்துப் பரிகசிப்பானேன்? அவள் பரிகசித்துப் பேசுவதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. தக்க காரணம் ஒன்றினை ஆசிரியர் நகைச்சுவையுடன் இனிமையும் ததும்பக் கூறிவிடுகின்றார். தவறான காரியத்தைச் செய்துவிட்ட ஒருவன், தான் செய்த அந்தக் காரியத்தால் தனக்கு இடையூறு நேர்ந்த பொழுது "நாமே செய்து கொண்டது தானே" என்று எண்ணி வருந்தாமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம். பிறரால் துன்பம் வந்த பொழுது அதற்காக வருத்தப்பட்டாலும் ஏதோ அர்த்தம் இருக்கிறது என்று சொல்லலாம். நாயகியின் கண்களுக்கு இந்த உண்மை தெரியவில்லையாம். தாமே வரவழைத்துக் கொண்ட துன்பத்திற்குத் தாமே வருந்திக் கொண்டிருக்கின்றனவாம். இது அறியாமை தானே! நாயகி இப்படிக் கூறுகின்றாள்.

முதன் முதலில் காதலனைக் கண்டபொழுது இந்தக் கண்கள் முன்பின் சிந்தித்துப் பார்க்காமல் அவனை அப்படியே உற்று நோக்கி அவன் மீது காதல் கொண்டு விட்டனவாம். அவனைக் காணுகின்றபோது அந்தக் கண்களுக்கு இருந்த வேகம் இவ்வளவு தான் என்று சொல்லமுடியாது. அந்தவேகத்தினை 'கதும் என' என்ற சொற்களினால் ஆசிரியர் புலப்படுத்துகிறார். கண்கள் இரண்டும் தாமாகவே, ஆவல்கொண்டு பார்த்து இன்பத்தில் மூழ்கிக்குதித்தன: "கதும் எனத் தாம் நோக்கி" என்று அழகுபட ஆசிரியர் இனிய சொற்களை அடுக்கி விளக்கிவிட்டார்.

அவ்வாறு தாமே ஓட்டமாக ஓடி நாயகனைக் கண்டு இன்பமுற்ற அந்தக் கண்கள், பின்னாட்களில் நாயகன், காதலுக்கினியன்-பிரிந்து சென்று விடுவானே யானால் வருந்தவேண்டி நேரிடுமே என்று நினைத்துப் பார்க்கவும் இல்லை. ஆரம்பத்தில் இன்ப நாயகனைக் கண்டு காதலி எந்த நிலையில் தனது உள்ளத்தைப் பறிகொடுத்து நின்றாள் என்கின்றசெய்தியினை அக்கண்களின் மூலம்-அவைகளின் செய்கைகளின் வழியாக -நாம் புரிந்து கொள்ளும்படி ஆசிரியர் நயம்படக் கூறுகின்றார்.

கண்கள், அப்பொழுது அவ்வளவு வேகமாகப் பார்த்துத் தாமே காதலித்துக் கொண்டு, இப்பொழுது ஏன் அழுதல் வேண்டும் என்று நாயகி கேட்பதும் நியாயந்தான். "தாமே கலுழ்தல்" (தாமே அழுதல்) இச்சிறு சொற்களால் அந்தக் கண்கள் அழுகின்ற நிலைமையினை ஆசிரியர் விளக்கிவிட்டார்: 'தாமே, ஆவலுடனும் ஆவேசத்துடனும் பார்த்துக் காதலித்து இப்பொழுது தாங்களே (கண்கள்) அழுகின்றனவே' என்கின்றாள். [கதும் எனத் தாம் நோக்கி தாமே கலுழும்.] தம்முடைய குற்றத்தைத் தாமே உணர்ந்து கொள்ளாமல் அழுகின்றனவே என்று நாயகி சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தாள். அவளுக்கே நகைப்பு வந்துவிட்டது. அதைத்தான் அவளும் கூறுகின்றாள். "இது நகத்தக்கது"- இந்தச் செய்கை - கண்களின் அழுகை - நாம்தானே முதலில் காதலனைக் கண்டோம் - என்பதை நினைத்துப் பார்த்து ஆறுதல் கொண்டு அழாமல் இருக்கத் தெரியாத இந்தக் கண்களின் செய்கை நகைப்புக்கிடமாய் இருக்கின்றது என்கின்றாள். நாயகியின் அவயவங்கள் படும் வேதனையும், பிரிந்த நாயகன் பால் நாயகி கொண்டிருக்கும் இன்ப எண்ணங்களும், அவனைக் கண்டின்புறுதலே தனக்கு இன்பத்திலும் இன்பம் பயக்கும் என்கின்ற மனப்பான்மையினையும் கற்பனை நிறைந்த பொருட்செறிவுடன் ஆசிரியர் வள்ளுவனார் தந்துவிடுகிறார்.

கதும் எனத் தாம் நோக்கித்
தாமே கலுழும்
இது நகத் தக்கது உடைத்து—

[கதும் என — விரைவாக, தாம் நோக்கி — தாமே (கண்களே) காதலனை முதன் முதலில் சந்தித்து, கலுழும் — (இப்பொழுது) அவன் பிரிந்திருப்பதினால் அவைகளே அழுகின்றன; இது — இந்தச் செய்கை, நகத்தக்கது உடைத்து - சிரித்துப் பரிகசிக்கவேண்டிய தொன்றாகவே இருக்கின்றது.]

அவளுக்கென்ன?



கோவை இளஞ்சேரன்

அன்றுநம் கொல்லையிலே கனிந்து வீழ்ந்த
அழகமைந்த மாங்கனிக ளிரண்டி லொன்றைத்
திண்ணையில்நீ நிற்கையிலே கொணர்ந்து தந்தேன்
தேனூறுங் கனியதைநீ உருட்டிப் பார்த்து
உண்ணுதற்கே உதடமுத்திக் கடிக்கும் போதில்
உலைவிழுங்க முன்வீட்டில் பார்த்து நின்ற
கண்ணழகி எதற்கென்று பெருமூச் சிட்டாள்?
கனியதனை நீசுவைத்தால் அவளுக் கென்ன?

குதர்க்கமாய்க் கேட்கின்றே னென்றே யெண்ணிக்
குட்டுதற்கு வாராதே! அன்றோர் மாலை
புதர்க்குள்ளே மலர்ந்திருந்த மலரி லொன்றைப்
பறித்தோடி வந்துனக்குக் கொடுத்து நின்றேன்;
மதர்க்கின்ற மணமதைநீ முகர்ந்து நிற்க,
மருட்சிகொண் டெதிர்வீட்டில் நின்ற பெண்ணாள்
எதற்கென்று இதழதுக்கிப் பெருமூச் சிட்டாள்?
எழில்மலரை நீமுகர்ந்தால் அவளுக் கென்ன?

தலைசீவி உடைதிருத்திக் கல்லூ ரிக்குத்
தக்கதொரு போதினில்நீ கிளம்பும் போது
தலையசைத்துக் கைவிரித்துத் தாழ்வா ரத்தில்
தவழ்ந்துவரும் தங்கையைநீ அணைத்துத் தூக்கி
அலையெனவே அடுக்கடுக்காய் முத்த மிட்டாய்;
அதைநோக்கி எதிர்வீட்டில் நின்ற பெண்ணாள்
தலைகவிழ்த்தே உடல்விம்ம ஏன்மூச் சிட்டாள்?
தங்கையைநீ முத்தமிட்டால் அவளுக் கென்ன?



கைவளைகள் ஒலிக்கின்ற சத்தங் கேட்டு
கண்களையப் பக்கத்தில் திருப்பி விட்டேன்
மெய்யசையச் சிற்றிடையில் குடத்தை யேந்தி
வேல்விழியை நாற்புறமும் சுழல விட்டுச்
செய்யதிரு முகமலர அடியெ டுத்துச்
செவ்விதழில் மின்னல்விளை யாட, என்றன்
தையலங்கே வருகின்றாள் வந்து விட்டாள்
சஞ்சலமும் இனியென்ன? வாழ்க நெஞ்சே!

செங்கதிரோன் உதித்துவிட்டால் செந்தா மரைதான்
செவ்விதழை விரிக்காதா! நிலவு கண்டு,
பொங்காதோ தண்கடலும்! முகிலைப் பார்த்துப்
பொலிநடனம் ஆடாவோ மயிலி னங்கள்!
திங்கள்முகப் பெண்ணரசி வரவுக் காகத்
திசைநோக்கி யிருந்தவிழிக் கொளியை யூட்ட
இங்கவளும் வருகின்றாள் வந்து விட்டாள்
இனியுமென்ன சஞ்சலங்காண்? வாழ்க நெஞ்சே!

மஞ்சத்தில் மணம்விரிக்கும் பூவி ரித்து
மங்கையுடன் நீவிரிக்கும் இன்ப ஏட்டில்
கொஞ்சத்தை இந்தபடி, அதற்குள் ளாகக்
குதிக்காதே துள்ளாதே நெஞ்சே வாழ்க!
பஞ்சத்தில் அடிபட்ட ஏழை மக்கள்
பார்வைக்குச் சுவையுணவு பட்ட தேபோல்
வஞ்சியென்றன் காதலுக்கு நல்வி ருந்தாய்
வருகின்றாள் வந்துவிட்டாள் வாழ்க நெஞ்சே!



மாடப் புறா

அத்தான்

கூடிப் பறக்குது மாடப்புறா — அதைக்
கூவி யழைத்திடு சின்னத்தம்பி!
மாடத்தில் கூட்டினைக் கட்டிவைக்கும் - ஆனால்
மாந்தர்போ லடபட்டுக் கிடைப்பதில்லை

குண்டுமணி போன்ற சின்னவிழி-தம்மில்
கொஞ்சமும் கெட்ட நினைப்பே யில்லை
அண்டை யயலுக்குத் தீமையில்லை - ஆனால்
ஆயிர மாயிரம் தீமைக்குள்ளாகும்

மூடரை வஞ்சகன் மறைவில் நின்றே - கொன்று
முற்றிலும் வெற்றி விதைப்பதைப்போல்
வேடனும் புதரினை அண்டி நின்று - கெட்ட
வேட்டுக் கிலக்கதை வைத்திடுவான்




வானப் பருந்தும்
வட்டமிடும்-வீட்டில்
வளர்கின்ற நாயும்
சப்புக் கொட்டும்
பூனைக்கும் ஆசை
வளர்ந்திருக்கும்
சின்னப் புறாவினுக்கு
எப்போதும் ஆபத்தடா!

நீல நிறத்துப் பட்டினைப்போல் - மின்னல்
நெளியும் கழுத்தின் அழகினைப்பார்!
காலினை ஒவ்வொன்றாய்த் தூக்கி வைத்தே - அது
கர்ப்பிணிபோல நடப்பதைப் பார்



அக்காளும் ஓட்டமாய்
ஓடிவந்தே -அதை
அள்ளி யணைக்கிறாள்!
கொஞ்சுகிறாள்!
சொக்கிடும் இன்பத்தில்
கைகாட்டி - அவள்
சொல்லிடும் செய்தியும்
யாருக்கடா!



கண் திறக்குமா?

ஆசிரியர்: நக்கீரன்

நடந்த கதை:

வாழ்க்கையில் பல சோதனைகளுக்கு ஆளான சந்திரமோகன், தன் கடைசி காலத்தில் தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் நோக்கி "கண் திறக்குமா!" என்ற கேள்வியுடன் தன் 'கதை'யைச் சொல்கிறான்.

சட்டப் பரீட்சையில் தேறிய சந்திரமோகன், பாரிஸ்டர் பரந்தாமனிடம் தொழிற்பயிற்சி பெறுகிறான். இந்தச் சமயத்தில், ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தி மகாத்மா கைதியானார் என்பதற்காகத் தேசமெங்கும் அவருடைய விடுதலையைக் கோரிக் கிளர்ச்சி செய்யப்படுகிறது. பாரிஸ்டர் பரந்தாமன், காந்திஜி கைதியானதற்காகப் பரம சந்தோஷப்படுகிறார். சந்திரமோகனுக்கு இது பிடிக்கவில்லை. அவன் அந்தக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டதன் பயனாகப் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறான். அங்கே தன்னைப் போலவே சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்த பாஸ்கரன் என்னும் தன் பள்ளித் தோழன் ஒருவனைக் கண்டு சந்திரமோகன் ஆறுதலடைகிறான்.

சந்திரமோகனைப் பார்ப்பதற்காக ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த தாயாரும் தங்கை பரிமளாவும் சர்க்காரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்துவிடுமாறு அவனிடம் மன்றாடுகின்றனர். அவன் அதற்கு மறுதலிக்கிறான். ஒருநாள் பாரிஸ்டர் பரந்தாமனின் ஏக புதல்வி சாந்தினி எதிர்பாராத விதமாக அவனை ஆஸ்பத்திரியில் சந்தித்து என்னை "மறவாதீர்!' என்று கேட்டுக்கொள்கிறாள்.

இதற்கு மத்தியில் மகனைப் பிரிந்த தாயார் இயற்கை எய்துகிறாள். தன்னந்தனியளான பரிமளாவுக்குச் சாந்தினி ஆறுதல் கூறுகிறாள். தஞ்சையிலிருந்து வந்திருந்த பரிமளாவின் மாமா அவளைத் தம்முடன் அழைத்துச் செல்கிறார். தன் அண்ணனின் செய்கையில் வெறுப்புக் கொண்ட பரிமளா, தாயார் இறந்ததைப் பற்றி மட்டும்தான் அவனுக்குத் தெரிவித்தாளே தவிர, தான் தஞ்சைக்குச் சென்றுவிட்டதைப்பற்றித் தெரிவிக்கவில்லை.

விஷயம் தெரியாத சந்திரமோகன் விடுதலையடைந்ததும் நேரே சென்னைக்கு வருகிறான். தன் வீட்டில் வேறு யாரோ குடியிருப்பதைக் கண்டு அவன் திகைக்கிறான். இந்தச் சமயத்தில் அவன் வீட்டு

சந்தித்து, விஷயம் அனைத்தையும் எடுத்துக் கூறுகிறான். ஆனாலும் அன்றே தஞ்சைக்குச் செல்வதற்கு அவனுடைய பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை. ஆகவே ஒன்றும் புரியாமல் அன்றிரவைப் பரிண்டர் பரந்தாமன் வீட்டில் கழிக்கலாம் என்ற உத்தேசத்துடன் அவருடைய வீட்டை நோக்கி அவன் நடக்கிறான். அங்கே அவனுக்கென்று ஓர் அதிசயம் காத்திருக்கிறது. ஏகாதிபத்திய பக்தரான பாரிஸ்டர் பரந்தாமன் அசல் காந்தி பக்தராகக் காட்சியளிக்கிறார்!

அன்றிரவு சந்திரமோகன் படுத்துக் கொண்டிருந்த அறைக்குள் சாந்தினி ஒரு கடிதத்தை விட்டெறிந்து விட்டுப் போகிறாள். அந்தக் கடிதத்தில் 'நாளை மாலை என்னை ஜெனரல் ஆஸ்பத்திரி வாயிலண்டை வந்து பார்க்கவும்' என்று கண்டிருக்கிறது. அதன்படி மறு நாள் மாலை இருவரும் சந்திக்கின்றனர். அங்கே, பரிமளா தன் மாமாவின் மகனை சிவகுமாரனால் விரஸமாக நடத்தப்படுகிறாள் என்ற செய்தி, சாந்தினி வாயிலாகச் சந்திரமோகனின் காதில் விழுகிறது. அதற்கு மேல் ஒரு நிமிஷம் கூட அவனால் தாமதிக்க முடியவில்லை. சாந்தினியின் உதவியைக் கொண்டு அவன் உடனே தஞ்சைக்குச் செல்கிறான். வழியில் சிவகுமாரனால் வஞ்சிக்கப்பட்ட செங்கமலத்திற்கு அவன் ஒரு சிறு உதவி செய்ய நேருகிறது. அப்பொழுதுதான் ஈன்றெடுத்த சின்னஞ்சிறு சிசுவுடன் அவள் காட்சியளிக்கிறாள். செங்கமலத்துக்காக இரங்கிய சந்திரமோகன்

னுடன் அழைத்துக்கொண்டு தன் மாமாவின் கிராமமான செய்யாமங்கலத்துக்குச் செல்கிறான். அங்கே பரிமளாவைக் காணவில்லை. அவன் நினைத்தபடி சிவகுமாரனிடம் செங்கமலத்தைச் சேர்க்கும் முயற்சியிலும் அவனுக்குத் தோல்வியே ஏற்படுகிறது, ஆகவே வேறு வழியின்றி அவன் அவர்களுடன் சென்னைக்குத் திரும்புகிறான்.

வழியில் செங்கமலத்தின் தாயார் ஊர் வாயை அடைப்பதற்காகத் தன் மகளுக்குத் தானே தாலியைக் கட்டி வைக்கிறாள். அதைக்கண்டு வியந்த சந்திரமோகனுக்கு அவள் தன் கதையைச் சொல்கிறாள். தான் ஏற்கனவே கல்யாணம் செய்து கொண்டிருந்த ஒரு பிராமணரைக் காதலித்து மணந்ததாகவும், அவர் இறந்த பிறகு தான் 'சூத்திரச்சி' என்பதற்காக அவருடைய சொத்தில் தனக்கு ஒன்றும் பங்கு கிடைக்கவில்லை என்றும் அதன் பயனாகத் தானும் தன் மகளும் நாதியற்று நிற்க நேர்ந்ததாகவும் அவள் கூறுகிறாள், செங்கமலம் அவளுடைய தாயார், சந்திரமோகன் ஆகிய மூவரும் எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கும்போது அங்கே, அவர்களுக்கென்று ஓர் அதிசயம் காத்திருக்கிறது. எதிர்பாராத விதமாக அங்கு வந்திருந்த பாஸ்கரன், செங்கமலத்தின் தாயாரைக் கண்டதும் 'சித்தி' என்றான். செங்கமலமோ அவனைக் கண்டதும் ஓடி ஒளிந்து கொள்கிறாள்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

- பரிமளாவைப் பார்த்தேன்! -

செங்கமலத்தின் தாயார், பாஸ்கரனின் சித்தி! — என்றால் இதை நம்பவே முடியவில்லை. ஆனால் சம்பவம் கதையில் நடக்கவில்லையாதலால், நான் அதை நம்பத்தான் நம்பினேன். சித்தியின் அலங்கோலத்தைக் கண்டோ என்னவோ, பாஸ்கரன் ஒரு கணம் அசைவற்று நின்று விட்டான். அவன் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பதைக் கண்ட சித்தி லேசாகச் சிரித்துக் கொண்டே, "என்னடா! 'சௌக்கியமா?' என்று கேட்கிறேன், பேசாமல் நிற்கி

ருயே!" என்று மீண்டும் கேட்டாள்.

அப்போதும் அவன் பதில் சொல்லவில்லை.

செங்கமலத்தின் தாயார் என்னை நோக்கி, "இவன் சின்னஞ் சிறுவனுயிருந்த போது அவர் இவனை அடிக்கடி கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வருவார். சிலசமயம் இவன் எங்கள் வீட்டிலேயே ஒருவாரம் இரண்டு வாரம் கூடத் தங்கி விடுவதுண்டு. அப்போதெல்லாம் இவனுக்கு நான் 'சூத்திரச்சி' என்றும், இவனுடைய அப்பா பிராமணரென்றும் தெரியாது. ஆகவே, எந்த விதமான வித்தியாசமும் இல்லாமல் என்னுடன் நெருங்கிப் பழகுவான். செங்கமலம் இவனைப் பார்த்துவிட்டால் போதும் - 'அண்ணு, அண்ணு! என்று வாய் ஓயாமல் கூப்பிட்டுக் கொண்டிருப்பாள். இவனும் அப்படித்தான் - எங்கள் வீட்டுக்கு வந்தால் செங்கமலத்தை விட்டு ஒரு நிமிஷம் கூடப் பிரிந்திருக்க மாட்டான். அதெல்லாம் அந்தக்காலம்; இந்தக்காலத்தில் அப்படியெல்லாம் இருக்க முடியுமா?" என்ருள்.

"ஏன் முடியாது, சித்தி! நிச்சயம் முடியும்" என்ருன் பாஸ்கரன்.

"எப்படி முடியும்? அதற்கு 'மனு தர்மம்' இடம் கொடுக்காதே!" என்றேன் நான்.

"மனு தர்மமாவது, மண்ணுங்கட்டியாவது! என்னைப்பற்றி நீ தவருக நினைத்துக்கொண்டிருக்கிருய், சந்தர்!" என்ருன் பாஸ்கரன் ஆவேசத்துடன்.

"நான் தவருக நினைத்துக் கொண்டிருக்கவில்லை; சட்டமே தவருக நினைத்துக்கொண்டிருக்கிறது. இந்த அழகான உலகத்தில் எந்தக்காலத்திலாவது மனுதர்மராஜன் என்ற ஒரு மடையன் இருந்தானே என்னவோ தெரியாது; இன்று அவன் பேரால் 'இந்துலா' என ஒரு சட்டம் இருப்பது மட்டும் உண்மை. அந்தச் சனியன் பிடித்த சட்டம் மட்டும் இல்லாமலிருந்தால் உன்னுடைய சித்திக்கு இந்தக் கதியே வந்திருக்காது, பாஸ்கர்!" என்றேன் நான்.

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! கொஞ்சம் விவரமாய்ச் சொன்னல் தேவலை!"

"சொல்லுகிறேன்; சொல்லாமலா போகப் போகிறேன்? -ஆனல் அதற்கு இது சமயமில்லை என்று தோன்றுகிறது. நீ எங்கேயாவது அவசரமாகப் போகிருயோ, என்னவோ?"

"கொஞ்சம் அவசரம்தான்! தங்கைக்கு உடம்பு சரியில்லை என்று ஊரிலிருந்து நேற்றுத் தந்தி வந்தது; அதற்காகப் போகிறேன்."

"சரி, திரும்பி வந்ததும் அதைப்பற்றிப்பேசிக்கொள்ளலாம். போய் வரட்டுமா?" என்று சொல்லிக் கொண்டு நான் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தேன்.

"ஆமாம், உனக்கு எப்படி இவர்களைத் தெரிந்தது?"

"அதுதான் கதை. அந்தக் கதையைத்தான் இப்பொழுது சொல்வதற்கு நேரமில்லை என்கிறேன்!"

"செங்கமலம் ஏன் என்னைக் கண்டதும பஞ்சாய்ப் பறந்து விட்டாள்? எனக்குச் சொல்லாமலே கல்யாணம் செய்து கொண்டு, எனக்குத் தெரியாமலே ஒரு குழந்தைக்கும் தாயாராகி விட்டதற்காகவா?"

"வெட்கக்கேடுதான்! - எல்லாவற்றையும் உனக்குப் பின்னுல் சொல்லுகிறேன. இப்பொழுது போய் வருகிறேம்!" என்று நான் நடையைக் கட்டினேன. செங்கமலத்தின் தாயார் 'திருதிரு' வென்று விழித்துக்கொண்டே என்னைப் பின்தொடர்ந்தாள்.

பாஸ்கரன் மட்டும் அப்படி இப்படிக் கொஞ்சங்கூட நகராமல் நின்றது நினறபடி நின்று கொண்டு என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான். நான் திரும்பி, "நீ ஊரிலிருந்து வருவதற்கு எத்தனை நாட்களாகும்?" என்று கேட்டேன்.

"இரண்டு நாட்களுக்குள் திரும்பி விடுவேன்!" என்ருன்.

"அதெப்படி முடியும்? அங்கே உன் தங்கையின் உடம்புக்கு அதிகமாயிருந்தால்.........?"

"இங்கு அழைத்துக் கொண்டு வந்துவிடுவேன."

"சரி, வந்ததும் என்னைப் பாரிஸ்டர் பரந்தாமன் வீட்டில் வந்துபார்!"

"எந்தியும் செங்கமலமுங்கூட உன்னுடன் தானே இருப்பார்கள்?"

"ஆமாம்."

'அப்படியானுல், நான் ஊரிலிருந்து திரும்பியதும் உன்னை வந்து பார்க்கிறேன்."

"சரி, போய் வருகிருயா?" என்று சொல்லி விட்டு நான் மேலே நடந்தேன். பாஸ்கரனின் தலை எங்கள் பார்வையிலிருந்து மறைந்ததும், செங்கமலம எங்கிருந்தோ ஓடிவந்து எங்களுடன் கலந்து கொண்டாள். இப்படியெல்லாம் நடந்து கொள்வதற்கு அவள் செய்த குற்றம்தான் என்னவோ!

பாரிஸ்டர் பரந்தாமன் வீட்டை நாங்கள் அடைந்த போது அங்கே யாரையும் காணவில்லை. நான் வீட்டு வாசலில் நின்று "ஸார், ஸார்!" என்று இரண்டு மூன்று முறை கூப்பிட்டுப் பார்த்தேன்; பதில் இல்லை.

சிறிது நேரம் கழித்து மிஸஸ் பரந்தாமன் வந்து கதவிடுக்கில் நின்று கொண்டு, "அவர்! இல்லையே" என்ருள்.

"எங்கே போயிருக்கிருர்?" என்று கேட்கலாமென்று நான் சற்றுத் தலை நிமிர்ந்தேன். அதற்குள் அவள் தன் தலையை உள்ளுக்கிழுத்துக் கொண்டு விட்டாள்!

'பெண்ணாய்ப் பிறந்த தோஷம் போலும்!' என்று நான் எண்ணிக் கொண்டேன்.

நம் வருகையை முன்னதாகவே தெரிவித்துச் சாந்தினிக்கு ஒரு தந்தியாவது கொடுக்காமற் போனேமே என்று அப்பொழுது எனக்குத் தோன்றிற்று. ஆனால் அடுத்த கணமே, "இது என்ன கூத்து! சாந்தினிக்காவது, நாம் தந்தி கொடுப்பதாவது! அவள் யார், நாம யார்? பெண்ணாய் பிறந்த ஒருத்தியுடன் ஆணாய்ப் பிறந்த ஒருவன் பகிரங்கமாகப் பழகுவது நம் சமூகத்தில் சகிக்க முடியாத குற்றமாயிற்றே!" என்பதை நினைவு கூர்ந்து என்னை நானே தேற்றிக் கொண்டேன்!

'பாரிஸ்டர் பரந்தாமனுக்கு வேண்டுமானால் தந்தி கொடுத்திருக்கலாம். ஆனால் அதைப் பற்றி இப்பொழுது எண்ணி என்ன பிரயோசனம்? நடந்த காரியத்தைப்பற்றி யோசிப்பதை விட நடக்கவேண்டிய காரியத்தைப்பற்றி யோசிப்பது நல்லதல்லவா?'— இவ்வாறு எண்ணிய வண்ணம வெளியே வந்தேன்.

'பரந்தாமன் வரும் வரை இங்கேயே காத்திருக்கலாம். ஆனால், அவர் ஏதாவது விபரீதமாக நினைத்துக்கொள்வாரோ, என்னவோ? இல்லையென்றால், அவர் தம் மனைவியை ஏன் இப்படி வீட்டுக்குள்ளே போட்டுப் பூட்டி வைக்கும் விந்தை மனிதராயிருந்திருக்கப் போகிறார்!'—இப்படி என்னவெல்லாமோ எண்ணிக் குழம்பியது மனம். செங்கமலமோ நிற்பதற்குக்கூடச் சக்தியின்றி உட்கார்ந்து விட்டாள். அவள் தாயார் சோகமே உருவாய் அங்கிருந்த மதிற் சுவரில் சாய்ந்து விட்டாள். நானே அப்படியும் இப்படியுமாக 'விர் விர்' என்று பறந்து கொண்டிருக்கும் கார்களைப் பார்த்த வண்ணம் ஆடாமல் அசையாமல் நின்று விட்டேன்.

இந்த நிலைமை நெடுநேரம் நீடிக்க வில்லை; சாந்தினி வந்தாள்!—என் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன!

ஆயினும் என்ன? அவளை நான் பார்ப்பதற்கும், அவள் என்னைப் பார்ப்பதற்கும் தான் சமூகம் எங்களை அனுமதித்தது. வாயைத் திறந்து ஒரு வார்த்தையாவது பேச அனுமதிக்க வில்லை! அந்தச் சமூகத்தை லட்சியம் செய்யாமல் நாங்கள் பேசியிருக்கலாம். அதற்கு வேண்டிய துணிவும் எங்களிடம் இருக்கத்தான் செய்தது. ஆனாலும் ஏதோ ஒருவிதமான அச்சம் தோன்றி அதற்குக் குறுக்கே நின்றது. இந்த நிலை இன்றுதான் ஏற்பட்டது என்பதில்லை; நாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு முறையும் ஏற்படத்தான் செய்தது. இருந்தாலும் ஒரு முறையாவது எங்களால் அந்த அச்சத்தைத் தவிர்க்க முடிந்ததில்லை. 'இந்தப் பலவீனம் ஏன்?' என்று நான் எத்தனையோ முறை யோசித்துப் பார்த்திருக்கிறேன்; ஒன்றும் புலனாகவில்லை.

மேலும், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றும் அந்த அச்சத்தை ஆண்கள் வேண்டுமானால் உதறித் தள்ளி விடலாம். அதனால் அவர்களுக்கு எந்த விதமான ஆபத்தும் நேர்ந்து விடாது. சமுதாயமும் அவர்களை எந்த விதத்திலும் பழி தீர்த்துக் கொள்ள

முடியாது. ஆனால் பெண்கள்?—அதிலும் கன்னிப் பெண்கள்?—நாலு பேருக்குத் தெரிந்து தான் விரும்பிய ஒருவனுடன் ஒரு வார்த்தை பேசிவிட்டால் போதுமே!—அவளுடைய வாழ்வுக்கே அல்லவா அவர்கள் உலை வைத்து விடுவார்கள்?

ஏன் இப்படி?—பெண்கள் ஒழுங்கினமாக நடந்து கொள்வார்கள் என்று பயந்தா?—அதெப்படி பெண்கள் மட்டும் ஒழுங்கினமாக நடந்து கொள்ள முடியும்? அவர்களுடன் ஆண்களும சேர்ந்தால் தானே ஒழுங்கினமாக நடந்து கொள்ள முடியும்?—இந்த நிலையில் பெண்கள் மட்டும் குற்றவாளிகள் என்று எப்படிச் சொல்வது? ஆண்களுந்தானே குற்றவாளிகள்?—அப்படியானால் சமுதாயத்தின் தீர்ப்பு ஏன் அவர்கள் இருவருக்கும் பொதுவாக இல்லை?

எது எப்படியானாலும் அப்பொழுதிருந்த நிலையில் சாந்தினியுடன் என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. "பரிமளா எங்கே?" என்று என்னையும் அறியாமல் கேட்டுவிட்டேன்.

அவ்வாறு கேட்ட பிறகு தான், அப்போது நான் மட்டும் அங்கே இல்லை யென்பதும், என்னுடன் செங்கமலமும் அவளுடைய தாயாரும் இருக்கிறார்கள் என்பதும் தெரிய வந்தது. "இந்த 'அடாத' செய்கையைக் கண்டு அவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்?" என்று எண்ணியபோது என்னை என்னவோ செய்தது. உடனே அவர்களுடைய முகத்தை ஏறெடுத்துப் பார்ப்பதற்கு வேண்டிய தைரியம் வராவிட்டாலும், அடுத்த கணமே என்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு விட்டேன். சாந்தினியும் கொஞ்சம் துணிந்து, "நேரே உங்கள் வீட்டுக்குச் சென்று பாருங்கள்" என்று தன் வீட்டுக்குப் போகிற போக்கில் சொல்லி விட்டுப் போனாள்.

அப்பப்பா! இதைச் சொல்வதற்குள் அவள் எத்தனை முறை தன்னைச் சுற்றி முற்றும் பார்த்துக் கொண்டாள்!—இப்படிப்பட்டவள் தன்னந்தனியாக ஆஸ்பத்திரிக்குச் சென்று எப்படித்தான் டாக்டர் தொழில் செய்து விட்டு வருகிறாளோ! அதற்கு அவளுடைய தகப்பனார் தான் எப்படி அனுமதிக்கிறாரோ!

அதற்கேற்றாற்போல் அவள் அவ்வாறு சொல்லி விட்டுச் சென்றாளோ இல்லையோ, செங்கமலமும் அவளுடைய தாயாரும் என்னையும் சாந்தினியையும் மாறி மாறிப் பார்க்க ஆரம்பித்து விட்டனர். அவர்கள் மட்டுமா? அந்த ரஸ்தாவில் அப்பொழுது அப்படியும் இப்படியுமாகச் சென்று கொண்டிருந்தவர்களுந்தான்! — அந்தப் பார்வைகளில்தான் எவ்வளவு தூரம் சந்தேகத்தின் சாயை படர்ந்து கிடந்தது?

இந்த விசித்திரமான ஜீவன்களைப்பற்றி எண்ணி நான் எனக்குள் லேசாகச் சிரித்த வண்ணம் மேலே நடந்தேன். இவ்வளவு சீக்கிரத்தில் அந்த வீட்டிலிருந்தவர்கள் எப்படி அதை விட்டுப் போக முடிந்தது என்பது எனக்கு விளங்காத

புதிராகவே யிருந்தது. இருந்தாலும் அதைப் பற்றிப் பின்னால் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம் என்று 'விடுவிடு' வென்று நடந்தேன். என்னைப் பின்பற்றி நடப்பதற்குச் செங்கமலமும் அவளுடைய தாயாரும் கொஞ்சம் திணறித்தான் போனார்கள்!

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு பரிமளாவைப் பார்க்கப் போகிறேன். அவளுடைய உடலும் உள்ளமும் எப்படி எப்படி யெல்லாம் மாறுதல் அடைந்திருக்குமோ! இந்த அருமை அண்ணனைக் கண்டதும் அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வருமோ?-இல்லை, ஆனந்தம்தான் பொங்கிக் கொண்டு வருமோ? பெற்ற தாயார், உடன் பிறந்த சகோதரிகள்-இவர்களைத் தவிர வேறு எந்தப்பெண்களைக் கண்டாலும் 'மனைவி முறை' கொண்டாட விரும்பும் ஈனர்கள் நிறைந்த இந்த உலகத்திலே, தன்னந் தனியாக வாழ நேர்ந்த அவளுக்கு என்னென்ன சோதனைகளெல்லாம் ஏற்பட்டனவோ? பெற்ற தாயைப்பிரிந்து பிறந்த வீட்டை விட்டுப் பணச்செருக்கால் மனிதத்தன்மையையே இழந்து விட்ட அந்தப் பாவிகளிடம் அடைக்கலம் புகுந்த அவளது வாழ்க்கை எவ்வளவு வேதனை நிறைந்ததா யிருந்ததோ? - இப்படி யெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டே நான் ஆவலே உருவாய் என்னுடைய வீட்டுக்குள் நுழைந்தேன்.

இம்முறை என்னைக்கண்டதும் வீட்டின் கதவு சாத்தப் படவில்லை; திறந்தது திறந்த படியே யிருந்தது!

பரிமளா என்னைப் பார்த்தாள்; பார்த்தது பார்த்த படி ஒரு கணம் அப்படியே நின்றாள்!

என்னைக் கண்டதும் அவளுக்கு ஆனந்தம பொங்கிக் கொண்டு வரவில்லை; ஆத்திரம தான் பற்றிக்கொண்டு வந்தது. ஆனால், அந்த ஆத்திரத்தில் கோபத்தைக் காண முடியவில்லை; துக்கத்தைத்தான காண முடிந்தது. அடுத்த கணம் அவள் விம்மி விம்மி அழுதபடி உள்ளே சென்று உட்கார்ந்து விட்டாள்.

நான் அவளைப் பின் தொடர்ந்து சென்று, "பரிமளா!" என்றேன். என்குரலும் ஏனோ தழதழக்கத்தான் செய்தது.

உடனே அவள் எழுந்து நின்று சொன்னாள்.

"அண்ணா! என்ன இருந்தாலும் இனி உனக்கு என்னை விடத் தேசந்தான் பெரிதாயிருக்கும். அதற்காக நீ என்னை விட்டு அடிக்கடி பிரிய நேரலாம். அப்படிப் பிரியுமுன் நீ எனக்கு ஒரு சிறு உதவி செய்ய வேண்டும்.........?"

"என்ன உதவி......?"

"அந்த உதவியைச் சாந்தினியிடம் கூடக் கோரியிருக்கிறேன். அதைச் செய்வது அவளுக்கு எவ்வளவோ சுலபம். அம்மாவுக்குப் பிறகு அம்மாவாக இருந்து எனக்காக இதுவரை எவ்வளவோ செய்திருக்கும் அவள், அந்த உதவியை மட்டும் ஏனோ செய்யமாட்டேன் என்கிறாள். நீயாவது அவளிடம் சொல்ல வேண்டும் - உனக்காக அவள் இப்பொழுது என்ன வேண்டுமானாலும் செய்

வான் போலிருக்கிறது - உன்னிடம் அவள் அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிருள். ஆனால் எனக்கு மட்டும் உன்னிடம் துளிக்கூட நம்பிக்கையில்லே. அண்ணு, அதனுல் தான் அந்த உதவியை நீ எனக்கு அவசியம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறேன்........."

"பரிமளா! உன் மனம் மிகவும் புண்பட்டுப் போயிருக்கிறது. அதனுல்தான என்னவெல்லாமோ பேசுகிருய்! என்னிடம் ஏன உனக்கு நம்பிக்கையில்லே?—வாழ்க்கை எப்பொழுதும் சுகம் நிறைந்ததாயிருக்காது. கஷ்டமும் கலந்ததாய்த் தான் இருக்கும். இதற்கா இப்படிச் சோர்வடைந்து விடுவது?—உனக்கு என்ன வேண்டுமோ சொல்; உடனே செய்கிறேன்."

"ரொம்ப சந்தோஷம், அண்ணு! இந்தத் தடவை சிறைக்குப் போகுமுன் நீ எங்கிருந்தாவது எனக்கு ஒரு துளி நல்ல விஷமாகப் பார்த்து வாங்கிக் கொண்டுவந்து கொடுத்து விடவேண்டும்' என்ன, செய்வாயா?"

இதைக் கேட்டதும் நான் திடுக்கிட்டேன். "பரிமளா! இது என்ன இது! நீ இவ்வளவு கோழையாய் இருப்பாய் என்று நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லேயே!" என்றேன்.

இந்தச் சமயத்தில் வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ஜன்னல் வழியே பார்த்தேன். பாரிஸ்டர் பரந்தாமன் காரிலிருந்து இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தார். (தொடரும்)



லீலாவுக்கு நளினி

டி.கே.சீனிவாசன்

லீலா!

'ஆசை' லீலா, 'பிரியமுள்ள' லீலா, 'அன்புள்ள' லீலா என்று அடைமொழிகள் சேர்த்து எழுதலாம் என்றுதானிருந்தேன். ஆனால், "லீலா" என்ற இரண்டு எழுத்துக்களையும் எழுதும் போது என் மனதில் மலரும் மகிழ்ச்சியே போதும். தேவையில்லாமல் வார்த்தைகளைக் கொட்டுவானேன் என்று விட்டு விட்டேன்.

நீ எழுதிய கடிதத்தைப் படித்தேன். வெட்கங் கெட்டவள், இழிவுருவானவள் என்று ஏற்கனவே உன் மனதில் உருவாகியிருந்த சில அருவருப்பான வார்த்தைகளை அள்ளிக் கொட்டியிருக்கிறாய். புனிதமான தெய்வத்தைத் தேடிச் செல்லும் உண்மையான பக்தன் இருட்டறையிலும் குமட்டும் வாடையிலும் சிறைப்பட்ட அழுக்கேறிய சிலையைக் கண்டால் எப்படி வருந்துவானோ அப்படியே ஆனேன்!

தோழி! இளமையிலிருந்தே நீ என்னை நன்றாக உணர்வாய். மனமொத்து வாழ்ந்தோம். உன் புத்தகம் காணாமற் போன போது என் உயிர் போனது போல நான் துடித்தேன். நான் கீழே விழுந்து என் முழங் காலில் அடிபட்ட போது நீ அழுதே விட்டாய். வளரும் பருவத்தில்கூட உள்ளங்களை மட்டும் ஒத்த அளவிலேயே விட்டு வைத்திருந்தோம். "அன்று" என்று நீ நினைப்பாய். "இன்று" எனத்தான் என் மனம் இன்னும் எண்ணிக் கொண்டிருக்கிறது. பிணைப்புற்ற நம்மிருவர் உள்ளங்களும் பிடிப்புத் தளராது உறவாடிக்கலந்த அந்த நாட்கள் இன்னும் என் கண் முன்னே மறையாமல் நிற்கின்றன.

மலர்ந்த பருவத்தில்கூட மனங் கொஞ்சங்கூடப் பிணங்காமல் காலங் கழித்தோமே! எதிர்காலத்தை மனதாலேயே எட்டிப் பிடித்தோமே! நம் கண்ணால் காணாமலே நமக்கென்று பிறந்து வளர்ந்து கொண்டிருந்த வாலிபர்களை உருவகப்படுத்திப் பார்த்தோமே! நம்மில் யாராவது ஒருவர் ஆணாக இருந்திருந்தால் இந்நேரம் "அப்பா", "அம்மா" என்று நம்மை அழைக்கும் ஆசைக் குழந்தைகளோடு கொஞ்சிக் கொண்டிருப்போம். அப்படியிருந்தும் இப்படிக் கடிதம் எழுத உனக்கு எப்படியம்மா மனம் வந்தது?

"ரயில் ஒரு பெரிய ஸ்டேஷனை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. வழியில் பலப்பல சின்ன ஸ்டேஷன்களில் நின்று நின்று போகிறது" என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அதுபோலத் தானம்மா மனிதர்களும் எங்கேயோ எதையோ நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். மரணத்தை நோக்கிப் போவதாகப் பொய் சொல்லுவார்கள். உண்மை அப்படித்தானிருந்தாலும் எவரும் அதை நோக்கிச் செல்லுவதே இல்லை! இன்ப வாழ்வு, ஆதிக்க ஆசை, மதிப்பு, பெருமை இவற்றில் ஏதோ ஒன்றை நோக்கித்தான் ஒவ்வொருவரும் போகிறார்கள். வழியில் எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள், சந்திப்புகள், உறவாடுதல்கள். இவற்றையெல்லாம் வெகு சீக்கிரம் உதறித் தள்ளிவிட்டு உணர்ச்சியற்ற ரயில் வண்டியைப் போலத்தான் எல்லோரும் நடந்து கொள்ளுகிறார்கள். நாம் இருவரும் அப்படி இல்லையே, லீலா! ஒரே குறிக்கோளை எண்ணித்தானே கைகோர்த்துக் கொண்டு நடந்தோம். பிணைப்புற்ற இரு கரங்களையும் இவ்வளவு எளிதில் வெட்டித் துண்டிக்க எப்படியம்மா உனக்கு மனம் வந்தது?

என்னை விட்டு நீ பிரியும் போது வெகு நேரம் அணைத்துக்கொண்டே உட்கார்ந்திருந்தோமே! எத்தனை எத்தனை வாக்குறுதிகள், மீண்டும் மீண்டும் பல முறைகள் பார்ப்போம், பேசுவோம், உறவாடுவோம், என்ற நம்பிக்கை நிறைந்த உறுதிமொழிகள் — இவைகளெல்லாம் என் நெஞ்சில் இன்கின்றனவே!

என்னைத் தனிமையி இருந்து தவிக்க விட்டு விட் நீ போய விட்டாய். உன்னை தவிர வேறு எவரோடும் இ ரண்டு வார்த்தைகளுக்கு மே பேசினதே இல்லை. தேவைக் மேல் பேசினால் தேன் சிந்தி போகுமோ என்று என்னை எ லோரும் கேலி செய்வார்களே நினைவிருக்கிறதா? மன விட்டுப் பழக நீ ஒருத்திதா இருக்கிறாய் என்று எண் யிருந்தேன். ஒளியாமல் சொ லுகிறேன்: உன்னை என் மன இறுகத் தழுவியிருந்தது. முன் புறம், பின்புறம் திரும்பி பார்க்குமளவு கூடத் தள வில்லை. அவைகளை எல்லா நீ மறந்து விட்டாய். ஒளியை அணைத்துவிட்டு விழியை திறந்தவள் போல மாறிவிட் டாய்!

நீ என்ன, உலகமே என்னைத் தூற்றும், கேலிசெய்யும், உதா சீனமாக வெறுத்துப் பேசும் என்னிடம் தற்காலிகமாக அன்பு காட்டும் ஆண்களெல் லாம் என்னென்ன சொல்வார் கள் தெரியுமா? காந்தக்கல்லை ஆட்டினால் பக்கத்திலிருக்கும் இரும்புத் தகடும் ஆடுமே அதைப்போல என் சுழலும் கண்கள் அவர்கள் மூளையையே சுழற்றுகின்றனவாம்! கலங் கரைவிளக்கு கடலில் வருங் கப் பல்கள் கல்லில்மோதிச் சிதறு வதைத் தடுக்க இருக்கிறதாம். ஆனால் மூடி மூடித்திறக்கும் என் விழிகளோ அவர்கள் இத யங்களை என் மோகன உருவத் தில் மோதிச் சிதறச் செய்கின் றனவாம்! அவர்கள் சிங்கா

சொல்வார்கள். நான் மட்டும் அவைகளில் மயங்கிவிடவில்லை. பலரிடம் கேட்டுப் பழகிப் போனதால் புளித்துக் கூடப் போய்விட்டது. பணம் அதிகமாகக் கொடுத்தால் பரிவோடு நடப்பேன். குறைந்தால் முறைத்தான் காணலாம். அவர்களும் என்னைக் கண்டபடி ஏசுவார்கள். "வெட்கங் கெட்டவளே" என்று ஏசி இந்தக் கடிதத்தை வீசி எறிந்து விடாதே! என் உணர்ச்சிகளெல்லாம் கருகித் தீய்ந்து போய்விட்டன. என் வாழ்வு ரூபாய் அணா பைசா வியாபாரமாக மாறி விட்டது!

நீ எனது உயிர்த் தோழி! ஆதரவு என்று நான் நினைக்கும் ஒரே பெண்! மனதைத் திறந்து பேச உன்னைத் தவிர எனக்கு வேறு எவரும் இப்போது—எப்போதும்—இல்லை. நீயும் நிந்தித்து என்னை உதறித் தள்ளி விட்டால்.........! லீலா! கேள் என் வாக்குமூலத்தை.

எனக்கு மணம் முடிந்தது. என் கணவர் என்னை அவர் மனதில் பொங்கும் மகிழ்ச்சியாகவே மதித்தார். அவ்வளவு பிரியமாயிருந்தார். நீகூட அடிக்கடி சொல்லுவாயே "நீ சிரித்தாலே போதும், ஆயிரம் பொன் தரலாம்" என்று, அவரும் அதையே அப்படியே சொல்லுவார். அவர் சொல்லும் போதெல்லாம் உன் உருவத்தில் கூடுவிட்டுக் கூடுபாய்வது போல எனக்குத் தோன்றும். உன்னைப் போலவே அவரும் என்னைத் தன்னந் தனியே ஒரு முழந்தானடி அவர் கட்டிய கயிறு! அது அறுந்து, அவர் என்னைவிட்டு மறைந்து போன பிறகு கூட ஒரு மைல் தூரத்துக்கு என்னைச் சுற்றி வளைக்கப்பட்ட முள் வேலியாக இருந்தது. என் உடலின் இளமை அப்படியே இருந்தது. உள்ளத்தில் எண்ண எண்ணத் தெவிட்டாத இன்ப நினைவுகளெல்லாம் தலைதூக்கி நின்றன. என் கணவர் காட்டிய அன்பும அவைகளில் பதிந்திருந்தது. தாவித் தாவி ஓடும் மனதையும், தன்னைமீறி அலையும் எண்ணங்களையும் கட்டுப்படுத்தி அடக்கினேன். அவைகளும் அலுத்து ஓய்ந்து போயின.

இரவு வேளைகளில் இருண்ட வானத்தில் எங்கேயோ இருந்து கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டிக் காதல்மொழிகள் பேசும் அந்த நட்சத்திரங்களில் மனதைப்பறி கொடுத்து உட்கார்ந்திருப்பேன்- அவைகளுக்கு மேலே ஏதோ ஒருஉலகத்தில் இருக்கிறார் என் கணவர்! அதற்கும் மேலே அவதி நிறைந்த வாழ்வை எவரும் அழிக்கமுடியாமல் என் தலையிலெழுதிய ஆண்டவன்! அவரை நோக்கித்தான் நல்ல கதி கிடைக்காதா என்று பிரார்த்தித்தேன், கண்ணீர் நிறைந்த கண்களோடு. என்னைக் கண் திறந்து பார்க்கும்படி வேண்டிக் கொண்டேன். மாலை நேரங்களில் கடவுள் சந்நிதியில் நின்று என் குறைகளைக்கூறி அழுவேன். காலை நேரங்களில் உதிக்கும் சூரியனிடம் மறு ஜன்

மதிலாவது என் தலை எழுத்தை மாற்றி எழுத ஆண்டவனிடம் போய்ச்சொல்லும்படி கேட்டுக்கொண்டேன். உன்னிடத்தில் கொண்டிருந்த அன்பு, என் கணவரிடம காதலாக மாறி, கடவுளிடத்தில் பக்தியாகப் பரிணமித்தது!

பெருமாள் கோவிலில், "சீதா கல்யாணம்" காலட்சேபம் ஏற்பாடு செய்தார்கள். இம்மையிலும் மறுமையிலும் எல்லையில்லாத இன்பம் ஏற்படும் அதைக் கேட்டால் என்று சொன்னார்கள். நாள் தவறாமல் அங்கே செல்லத்தொடங்கினேன். என்னைப்போன்ற எத்தனையோ சமூகத்தின் "அவமானச் சின்னங்கள்" அங்கே வருவார்கள். நாங்கள் கூடுவதைப் பார்க்க எத்தனையோ இளைஞர்கள்! பாகவதர் கூட எங்களுக்குத் தான் அது தேவை என நினைப்பார். எங்களைக் கரை யேற்றுவதில்தான் அதிக அக்கரைகாட்டுவார்! கதை பூராவையும் எங்களுக்கே, எங்கள் பக்கம் பார்த்தே சொல்லுவார்!

ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் உடல் அமைப்பை 'அழகாக வர்ணித்தார் - இவருக்கு எப்படித்தான் தெ

வொரு அசைவிலும் அவர் எப்படி இருப்பார் என்று அவர் விளக்கும் போது என் மனம் நெகிழ்வடையும். பாலைவனம் போலிருந்த என் மனதில் பச்சைப்பசேலென்று ராமர் கொடியாக, செடியாக, மரமாக, சோலையாக வேர்விட்டார். அவர் உருவத்தோடு என்னை ஐக்கியப் படுத்தி விட்டேன்.

அன்று சீதையை ராமர் தன்னந்தனியே சந்தித்தார். மகாவிஷ்ணுவின் அவதாரமாயிருந்த போதிலும் ஸ்ரீ ராமர் சீதையிடம் எப்படி நடந்து கொண்டார் என்று நினைக்கிறாய்? என் கணவர் அன்று - முதல் நாளிரவு நாங்கள் இருவரும் தனிமையில் இருந்த போது-நடந்து கொண்டதைப் போலத்தான்! மூடிக்கட்டி



முடிச்சுப் போட்டிருந்த நினைவு களெல்லாம் மெள்ளத் தலை தூக்கின. கடும் வெய்யிலில் காய்ந்து ஓய்ந்து நடக்கும் போது நிழலின் நினைவு தான் நிழல் எப்படி இருக்கும்? அதே நிலை அடைந்தேன்!

ஸ்ரீராமர் சீதாதேவியின் எதிரில் வந்து உட்கார்ந்தார். சீதை தன்னை மறந்தாள், நடுங்கும் கைகளோடு சீதையின் உடலை ராமர் பற்றினார். சீதை அவரைத் தழுவினாள். விரிந்து காற்றில் மிதக்கும் குடையோடு கயிறுகளால் பிணைக்கப்பட்டு ஆகாயத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் விமானியின் உடலைப் போலப் பிணைப்புற்ற இரு கைகளுக் கிடையே சீதையின் உடல் ஊசலாடியது. அவள் உட லில் இருந்த அத்தனை நரம்பு களும் முறுக்கேறின. வேகம் வேகமாக ஓடிக்கொண்டிருந்த இரத்தம் அவளைத் ததளிக்க வைத்தது. மத்தளத்தையும் தபேலாவையும் ஒரே நேரத்தில் ஓங்கி ஓங்கித்தட்டித் தாளம் போடுவதுபோல இருவர் இத யங்களும் அடித்துக் கொண் டன; துடித்துக்கொண்டிருந்த மெல்லிய உதடுகளை முரட்டு உதடுகள் அழுத்தித்துடிப்பை அடக்கின. தாகத்தால் தவித் தவன் தண்ணீர் கிடைத்தால் தன்னை மறந்து அனுப வித்துக் குடிப்பதைப் போலச் சீதை அள்ளி அள்ளிப்பருகி னாள் அந்த இன்பத்தை! இப்போது நினைத்தால் கூட என் நெஞ்சு புல்லரிக்கிறது. கவியரசர் பாரதிதாசன் மணி முடி பூங்கோதையைத் தழுவிய போது, "அத்தானே விடாதீர் என்றாள்" என்று எழுதியிருக் கிறாரே, அதன் கவிநயத்தைச் சொல்லியா புரிந்துகொள்ள முடியும்? சுவைத்து அனுபவிப் பதல்லவா அது! களைத்துப் போய் ராமர் கைகளைத் தளர்த் தினார். மூடியிருந்த கைகளைச் சீதை திறந்தாள்!

எவருமில்லை. இருள் சூழ்ந் திருந்தது. சந்நிதானத்தில் எரிந்த விளக்கு ஒளியைப் புகையாக மாற்ற நேரம் பார்த் துக்கொண்டிருந்தது. என் னெதிரே பக்கத்துவிட்டு ஷண் முக சுந்தரம் நின்று கொண் டிருந்தான். கலைந்துபோயிருந்த என் ஆடை, அவிழ்ந்து தரையில் படிந்திருந்த என் கூந்தல், படபடத்துக் கொண் டிருந்த உடல் இத்தனையும் என்ன நடந்தது என்பதை எனக்கு விளக்கின. முள்ளில் விழுந்த உடலைப்போல என் மனந்துடித்தது. நான் கட்டிக் காப்பாற்றிய அந்தப் பொருள் எட்டாத தூரத்தில் பறந்து எங்கேயோ மறைந்தே போய் விட்டது!

"அடபாவி" என அவனைச் சபித்தேன்.

"எவரிடமும் சொல்லமாட் டேன். பயப்படாதே" என்று சொல்லி மறுபடியும் என் கையைப்பற்றினான். வெடுக் கெனக் கையைப் பிடுங்கிக் கொண்டேன். ஆண்டவனைப் பார்த்தேன். விழித்த கண் களை மூடாமல் என்னையே பார்த்துக்கொண்டு அவர் நின் றார். ஓங்கி ஓங்கித் தலையிலடித் துக் கொண்டேன். விளக்கும் அணைந்து இருளை வெளிப்படுத் தியது!

நான் ஒழுக்கங் கெட்டவள், உன்நினைவில்! ஊரார் பேச்சில்! ஆண்டவன் சந்நிதியில்! ஆண்டவன் கண்ணெதிரிலேயே, அவர் மகிமையை விளக்கும் கதை தந்த போதையால், பலிபீடம் என்று தெரிந்தோ தெரியாமலோ பக்தியின் பேரால் என்னை என் பெற்ருேர் மனமுவந்து அங்கே அனுப்பியதால் கெட்டுப் போனேன்! கடுங்காவல் வைத்து கட்டுப்படுத்தியிருந்த என் மனதை மயங்கச் செய்ததே அந்த "சீதா கல்யாணம்" அதைப்பற்றி எவரும் நினைப்பதில்லை.

மலர்ந்த மலரென்று தானே பறித்துத் தலையில் சூடிக் கொண்டேன். மறைந்திருந்த "பூநாகம்" என்னைத் தீண்டியதற்கு நானு பொறுப்பாளி? கொழுந்து விட்டு எரிந்த நெருப்பைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தணித்து அவித்தேன். சாம்பலாகப் போகும்போது சத்கதா காலட்சேப மண்ணெண்ணெயை அதன் மேல் கொட்டியது. மறுபடியும் தணல் எரிய ஆரம்பித்தது. அதற்கு நானென்ன செய்வேன்? வயிறுபசிக்கும் போது குலுங்கும் மாங்கனிகள் கண்ணில் பட்டால் சுவரேறிக் குதித்தாவது பறித்துச் சாப்பிட மாட்டோமா? தனியாகத் தன்னை மறந்திருந்த என்னை ஷண்முகசுந்தரம் கனியாக எண்ணிவிட்டான்!

ஏற்கனவே எவராலோ தயாரிக்கப்பட்ட முடிவுகளை நீ விழுங்கி விட்டாய். தயவு செய்து வாந்தி எடுத்து விடு. நான் நிரபராதி, குற்றஞ் செய்யாதவள்! என்று எதிர் வழக்காட வரவில்லை. நீ கடிதத்தில் எழுதிய ஆபாசம் நிறைந்த சொற்கள் அடுக்காதம்மா என்று கூற வரவில்லை. வீட்டுக்குள் சிறைப்பட்டு வெளி உலகம் இன்னதென்று தெரியாமல் எட்டுத்திக்கையும் உணர்ந்தவள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் உன்னை இப்போது கேட்கிறேன். உன் முடிவு சரியா? நானு குற்றவாளி?

"உன் அன்புள்ள", "உனதாசை", "உன் பிரியமுள்ள" என்ற வார்த்தைகளை விழுக்காமல் என் நெஞ்சிலிருந்தே ஐந்து எழுத்துக்களையும் வெளியிலெடுத்து வைக்கிறேன்.

தோழி நளினு

---

2. அறிவுக் களஞ்சியத்தில்

தமிழ்

உயிர்கள் படிப்படியாக ஓரறிவு முதல் ஐயறிவு வரை வளர்ச்சியடைந்து மனித வாழ்வில் ஆறும் அறிவிலும் முதிர்ச்சியடைந்து வந்துள்ளன. ஒவ்வோர் உயிரும் தன் வாழ்க்கையில் அடைந்த அனுபவ அறிவை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்கிறது. புதிய தலைமுறை முந்திய தலைமுறையிலிருந்து அறிவு பெறத் தொடங்காமல் அதன் அனுபவத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அது விட்ட இடத்திலிருந்து புதிய அனுபவ அறிவில் முனைகிறது.

உயிர் வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் முந்திய தலைமுறை அறிவு பிந்திய தலைமுறைக்கு இயற்கை உணர்ச்சியாகவே வந்துகொண்டிருந்தது. இவ்வுண்மையைப் "பாம்புக் குட்டிக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கவாவேண்டும்?" என்ற பழமொழி விளக்குகிறது. ஆனால் உயிர்கள் வளர்ச்சி அடைய அடைய, தாய் அல்லது தந்தை பிள்ளைகளுக்குத் தன் அனுபவ அறிவையும் அனுபவத்தையும் புகட்டிப் பயிற்சி தரத் தொடங்கிற்று. தாய் தொடங்கிய இவ்வேலையைப் படிப்படியாகத் தந்தை பகிர்ந்தும் மேற்கொண்டும் வந்தது போல், மனித வாழ்வில் தாய் தந்தையின் கடமையைப் படிப்படியாகப் பள்ளி ஆசிரியர்களும் நூலாசிரியர்களும், பிறரும் பங்கிட்டுக் கொண்டனர்.

மனிதனுடைய ஆறும் அறிவு ஐந்து அறிவோடு சேர்த்து ...லும் உண்மையில் அவ்வைந்தறிவையும் உள்ளடக்கி அதற்கப்பால் இவ்வளவென்று வரையறுக்க முடியாமல் எல்லையில்லாமல் பரவி வருவதாகும். மனித வாழ்க்கையில் சிறப்பாகக் கூறப்படும் கல்வி, இலக்கியம், கலை, நாகரிகம், அறிவியல், சமயம் ஆகிய எல்லாம் உண்மையில் இவ்வெல்லையற்ற ஆறும் அறிவின் செயலுருவங்களே. இவை பெருகப் பெருக, ஆசிரியர்களும் ஆசிரியரிடம் கொண்ட நூல்களும் இலக்கியமும் எல்லையில்லாது விரிந்தன. பலவகைப் பள்ளிகள் (எழுத்தறிவிக்கும் பொதுப்பள்ளிகள், தொழில், கலை, தொழில் நுணுக்கப் பள்ளிகள் ஆகியவையும் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆகியவைகளும்) ஏற்பட்டன. ஒவ்வொரு பள்ளிகளிலும் ஆசிரியர்கள் வகையிலும் தொகையிலும் பற்பலராயினர். நூல்களும் நூலாசிரியர்களும் இது போலவே தொகை வகையாக விரிந்தன

சில வாழ்நாளுடைய தனி மனிதன் தனித்து நின்று ஆற்ற முடியாத இப்பெரும் பணியை இத்தகைய விரிந்த பகிர்வு முறையாலும் தொ...

அறிவுக் களஞ்சியம்

கட்டுரையாளர்: அறிஞர் கா. அப்பாத்துரை

தில் ஆற்ற முடிகிறது. ஆயினும் புதிய முன்னேற்றத்தில் ஈடுபடும் முன்னணி ஆராய்ச்சியாளர் அறிவின் பழம்பரப்பு முழுமையும் அறிந்தாலன்றிப் புத்தறிவில் முனைவதரிது. பல துறைகளாக அறிவுபிரிக்கப்படினும் இது நம் தோதுக்காக மட்டுமே. உண்மையில் ஒருதுறை அறிவு இன்னொரு துறைக்கு வழிகாட்டியாய் அதனுடன் பின்னியே கிடக்கின்றது. ஆகவே அறிந்த அறிவையெல்லாம் ஒருங்கு திரட்டும் பணியும் புது வளர்ச்சிக்கு வேண்டுவதாகிறது.

இத்தகைய தொகுப்பு முறைகள் பல நாகரிக நாடுகளில் இன்றியமையாதனவாயுள்ளன. நாகரிக வகையில் நாட்டு வரலாறும் உலக வரலாறும் இத்தகைய தொகுப்புக்களுள் ஒன்று. கல்வி வகையில் பல்கலைக் கழகம் மற்றொன்று. அறிவியல்களில் எல்லா அறிவியல் துறைகளின் முடிவுகளைத் தொகுத்து ஆராயும் மெய் விளக்கம் (*Philosophy*) ஒரு தொகுப்பு முறையே. மொழி வகையில் இலக்கிய வரலாறு, இலக்கணம், சொல் தொகுதி அகர வரிசை முதலியவையும், அறிவுக் களஞ்சியமும் இத்தகைய திரட்டுக்களே.

இவையனைத்திலும் அகன்று விரிந்து அனைத்தையும் உட்படுத்தி நிற்பது அறிவுக் களஞ்சியம் என்று கூறவேண்டுவதில்லை.

அறிவுக் களஞ்சியம் பழமையைத் தொகுத்துப் புதுமையை வகுப்பது. இறந்தகால அறிவையும் நிகழ்கால அறிவையும் இணைத்து அவ்வடிப்படைமீது வருங்காலக் கட்டடம் அமைப்பது. ஆகவே அது தமிழர் மறுமலர்ச்சிக்கு இன்றியமையா அடிப்படை முயற்சிகளுள் தலைமையானது ஆகும்.

அறிவுக் களஞ்சியம் இவ்வளவு இன்றியமையாததாயிருந்தும் தமிழ்நாட்டில் இது காறும் ஏற்படாததேன்? அதற்கடுத்தபடி சொல் தொகுதி அகர வரிசை முதலியவை கூடப் பிற்காலத்தன்றி முற்காலத்தில் ஏற்படாததேன்?

இதற்கு விடை கூறுவது எளிதன்று. இறந்துபட்ட இலக்கியத்தின் அளவை நோக்க, எவை கழிந்தன எவை இல்லாதன என்று கூற முடியாது. ஆயினும் தமிழ் நாகரிகம் முழு உயிருடன் நிலவிய காலத்தில் இலக்கிய உருவி

இவை இல்லை. பதிவு செய்ய எண்ணுவது மறக்கத்தொடங்கும் காலத்தில்தானே? ஆனால் தமிழர் தம் பண்பாடு மறக்கத் தொடங்கிய காலம் கி. பி. 3ம் நூற்றாண்டு. அப்போது இலக்கியத் தொகுப்பும் இலக்கண மீட்பும் ஏற்பட்டன. ஆனால் தமிழர் விழ்ச்சி இயற்கையாகவோ, படிப்படியாகவோ ஏற்படாமல் ஓரளவு திடுமெனக் களப்பிரர் படையெடுப்பாலும் பிற இடையூறுகளாலும் ஏற்பட்டதனால் இம்முயற்சியும் தடைப்பட்டிருக்கக் கூடும்.

7-ம் நூற்றாண்டிலிருந்து 12ம் நூற்றாண்டு வரை தமிழகம் சிதறிய தமிழ்ப் பண்புகளை ஓரளவு திரட்டி அயற் பண்புகளுடன் கலந்து புத்திலக்கியம் யாத்தது. அதன் இறுதிக் காலத்திலிருந்து சிதைந்த பழைய செல்வத்துடன் புதிய கலவைப் பண்பாட்டையும் சேர்த்துச்சொல் தொகுதிகள் (நிகண்டுகள்) எழுதப்பட்டன. இப்போது மேனாட்டறிவுலகின் தொடர்பு காரணமாகப் புத்தெழுச்சியும் புது மறுமலர்ச்சியும் தோன்றியது காரணமாக அறிவுக் களஞ்சிய முயற்சியில் மக்கள் கவனம் சென்றுள்ளது.

இம்முயற்சியின் சூழ்நிலைகளையும் அதன் விளைவுகளையும் அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

புயல்

கோவையில் ஷண்முகா அரங்கில் நடக்கும் டி. கே. எஸ். சகோதரர்களின் 'புயல்' நாடகத்திற்குப் போயிருந்தேன். 'புயல்', அருமையான புதுமைக் கருத்துக்கள் நிறைந்த கதை. கல்லூரி மாணவ மாணவிகளின் கோலாகலங்கள், வக்கீல் தொழில் முறை, பாங்கரின் பணத்தாசை, காதற் பிரிவு முதலிய நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு கதை கட்டப் பெற்றிருக்கிறது.

கதையுருப்பினர் அமைப்பு முறை மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. கதைத் தலைவன் இராகவன் இளமைத் துடிப்பு மிக்கவன். அந்தத் துடிப்புத்தான் அவனை வீழ்ச்சியுறச் செய்கிறது. கதைத் தலைவி சுபத்திரா சாதாரணப் பெண்ணல்ல! 'பெண்களென்றால், என்னைப் போலிருக்க வேண்டும்' என்று எடுத்துக் காட்டும் அணங்கு. கதைத் தலைவியின் சிற்றன்னையாக நடிக்கும் கௌரி, இந்நாட்டில் கைம் பெண்களாய்த் துயருறும் இளம் பெண்களின் உணர்வைப் படம் பிடித்துக் காட்டும் கருவியாக அமைகிறாள். அவள் வாழ்வை இன்ப துன்ப நிகழ்ச்சிகள் மாறிமாறித் தாக்குகின்றன.



'அகிலன்'

நாடகத்திற்கென்றே ஒருமுறை யமைத்துக்கொண்டு வசனம் எழுதி உணர்ச்சியைப் பாழாக்குகிறார்களே அப்படியில்லை 'புயல்' வசனம். வாழ்க்கையோடியைந்த நிகழ்ச்சிகளில் வெளிப்படும் குரல்களைத்தான் மேடையில் கேட்கிறோம். காதலர் சந்திப்பு, பிரிவு, இங்கெல்லாம் துன்பமும் ஏக்கமும் இதயத்தினின்றும் வெளிப்படுகின்றன. சில சமயங்களில் இலட்சியவாதியின் உணர்ச்சிப் பெருக்கு, இடியாக ஒலிக்கிறது.

இத்தனை அருமையாகக் கதையமைத்து வசனமும் எழுதிய அகிலன் பாடல்களும் எழுதியிருக்கிறார். ஒரு எழுத்தாளன் கதையாசிரியனாகவும் பாடல் அமைப்போனாகவும் விளங்கும் போது அங்கே கலை, உணர்வின் எல்லையை யடைகிறது. கதாசிரியன் பாடலும் வகுக்கும்போது அவனுடைய மனக் கருத்து அப்படியே பாடல்களில் அமைகிறது.

கதைத் தலைவியின் 'வசந்தமும் வந்தது!' என்ற இனிய பாடல், கைம பெண் கௌரி

கமான பாடல் இரண்டும் கதை நிகழ்ச்சிக்கேற்ற கருத்துணர்ச்சியை அப்படியே வெளிப்படுத்துகின்றன! "பொட்டும் அழிந்ததால், பூந்துகில் போனதால், பொன்னுடல் போயிற்றோ, இன்னுயிர் போயிற்றோ?" என்ற பாடல் கேட்பவர் நெஞ்சைத் தன்வயப் படுத்துகிறது. 'விசுதடா புயல்' என்ற பாடல் பிற்போக்காளரின் பயங்கரத்தைச் சொல்கிறது.

கதையமைப்பிற்கேற்ற நடிப்பு பொருந்தியிருக்கிறது. இராகவனாக வரும் பகவதி முற்போக்குள்ள இளைஞராகவும், காதலனாகவும், வேலையில்லாத பட்டதாரியாகவும் அந்தந்த நிலைக்கேற்ப நடிக்கிறார். அவர் கொலைகாரக் கைதியாகவும் விடுதலை வெறியனாகவும் தோன்றும் கட்டங்கள் சிறப்படைகின்றன. கதைத் தலைவி சுபத்திராவின் உயர்ந்த பண்பாட்டை திரௌபதி தம் நடிப்பில் அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார். காதற் காட்சிகளில் நடிக்கும் இன்பப்போக்கு, தந்தையிடம் பெண்ணுரிமைக்காகப் போராடும் கட்டம், காதல் தியாகம் முதலிய நிகழ்ச்சிகள் குறிப்பிடத் தக்கவை.

கௌரியாகவரும் சீதாலட்சுமி, வக்கிலாக வந்து 'லா பாயிண்ட் ஆவ்யூவில்' வெளுத்துவாங்கும் நகைச்சுவை நடிகர் இராமசாமி, ஆஸ்டல் வார்டனாகவரும் சிவதாணு முதலியவர்களின் நடிப்பு சிறந்துள்ளது.

களின் நாடகங்களுக்கென்றே உள்ள தனியமைப்பு, 'புயலி'ல் மெருகுபெற்று ஒளிர்கின்றது. நாடகப்போக்கு, படம் பார்ப்பதைப் போல நல்ல விறுவிறுப்பைத் தருகிறது. மாணவ வாழ்க்கையின் குறும்புகளும், மற்ற நகைச்சுவைக் கட்டங்களும் நம்மைச் சிரிக்க வைக்கின்றன.

முடிவாகச் சொன்னால் இது ஒரு நல்ல நாடகம். வெறும் பொழுதுபோக்காக அமையாமல் சிந்தனையைத் தூண்டிவிடும் கருத்துக்களோடு அமைந்திருக்கிறது. இந்நாடகத்தில் அகிலனுக்கும் டி. கே. எஸ். சகோதரர்களுக்கும் நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது.

நினைவுப் பாதையில்

இளமைப்பித்தன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

நாங்கள் குடும்பத்துடன் ராமேசுவரத்திற்கு ரயிலில் போய்க் கொண்டிருந்தோம். இந்த விஷயங்களொன்றும் அப்பாவுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் கட்டாயம் எங்களுடைய பிரயாணத்தைத் தடுத்தே இருப்பார்.

முன்பு ஒரு தடவை நான் சிறுமியாக இருந்த பொழுது அப்பா என்னை அழைத்துக் கொண்டு ஈரோட்டுககுப் போயிருந்தார். பெரியாரும் அப்பாவும் நெருங்கிய நண்பர்கள். பெரியாருடைய உடல் நிலை மோசமாக இருப்பதாகத் தகவல் கிடைத்தது தான் காரணம்; உடனே புறப்பட்டுப் போனோம்.

நான் பெரியாரை நேரில் பார்த்தது அதுதான் 'முதல் தடவை'. "பெரியார் என்றால் எப்படி இருப்பார்? மிகவும் உயரமாக இருப்பாரா அப்பா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர் விலா நோக நகைத்து விட்டு, "நிலா, பெரியாரென்பவர் நம்மைப் போலத் தான் இருப்பார்; அவர் வயதில் அறிவில் பெரியார்; வாய்மைப் போருக்கென்றும் இளையார். உயர் எண்ணங்கள் மலரும் சோலை" என்று பாரதிதாசனின் கவிதையைச் சொல்லிக் காட்டினர்.

வழியில் போகும்போது அப்பா பாடிய அந்தப் பாடல் இன்னும் நன்றாக நினைவிருக்கிறது எனக்கு.

நேராக அவர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

பெரியார் ஒரு கட்டிலின்மேல் போர்வையைப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தார். சிவந்த மேனி; தடித்த உடல்; பெருத்த தொந்தி; நடுத்தரமான உயரம்; வெளுத்த தலைமயிர்; நரைத்த மீசை; வெண்ணிறத் தாடி; திரண்டு நீண்ட மூக்கு; அகண்டு நீண்ட நெற்றி; ஒரு தனியான முகவெட்டு. என்னமோ ஒரு விதமான கவர்ச்சி.

அப்பாவைக் கண்டதும் அவருடைய ஆழமான கண்களில் முறுவலொளி வீசிற்று.

"வா சண்முகம்" என்றார் எழுந்திருந்து உட்கார முயன்று கொண்டே!

"சும்மா படுத்துக்கொள்ளுங்களண்ணு; வீணுக உடலை உபத்திரவப்படுத்திக் கொள்ள வேண்டாம்" என்றார் அப்பா!

"எத்தனை நாளைக்குத் தான படுத்துக்கொண்டிருக்க முடிகிறது!"

"திடீரென்று என்ன இப்படி?"

"காய்த்த மரத்திற்குத் தானே கல்லடி விழுகிறது; வயசு நிரம்பி விட்டால் மனிதனுக்கும், பிணி தளர்ச்சி, அயர்வு என்ற அடிகள் விழாமலிருக்குமா? இரண்டு நாட்களாகக் கொஞ்சம் தேவலாம்"

அந்த நேரத்தில் கூட அவர் வேடிக்கையாகப் பேசினார். நான் அவரையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தேன். பெரியாரின் பார்வை என் பக்கமாகப் பாய்ந்தது.

"அடே! இந்தப்பெண் யார்?" என்று கேட்டார்.

"இவள் என் மகள்!" என்றார் அப்பா சிரித்துக் கொண்டே! பெரியார் என்னை அருகிலழைத்து முதுகை தட்டிக்கொண்டே "உன் பேரென்ன அம்மா?" என்று கேட்டார்.

"நீலா!" என்றேன்.

"நிலாவா? தெலுங்கில், 'நீலு' என்றால் தண்ணீர் என்று பெயர். அப்படியென்றால் நீ தண்ணீரைப் போன்றவளா? பேஷ். தண்ணீர் நாட்டுக்கு எவ்வளவு உபயோகப்படுகிறதோ, அதேபோல உன் சேவையும் நாட்டுக்கு உபயோகப்பட வேண்டும். நீ புதிய தமிழ் நாட்டைச் சேர்ந்தவள் அம்மா, தெரிகிறதா?" என்றார்.

பசுமரத்தில் அடிக்கப்பட்ட ஆணியைப்போல அந்த வாக்கியம் இன்றும் என் மனத்தில் பதிந்திருக்கிறது!

புதிய தமிழ் நாட்டைச் சேர்ந்தவள் தான் புத்திர சந்தானம் பெறுவதற்காக ராமேசுவரம் போகிறேன்—இல்லை! என்னை அழைத்துக்கொண்டு போகிறார்கள்!

நாங்கள் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தோம். முதல் நாள் முழுக்குப் போட்டாய் விட்டது. கடலில் நாங்கள் மட்டும தானா? எங்களைப்போல் இன்னும் எத்தனையோ தம்பதிகள் வந்து நீராடினார்கள். என் மாமனாரும், மாமியாரும் கூடக் கைகளைக் கோர்த்துக் கொண்டு ஆனந்தமாகக் குளித்தார்களென்றால் கேட்பானேன்; அவர்கள் மனத்தில் எதை வேண்டிக்கொண்டிருந்தார்களோ அது எனக்கெப்படித் தெரியும்?

மறு நாள் கோயிலுக்குப் போகும் வழியில் இருபுறமும, பிச்சையெடுக்கும் ஆண்களும் பெண்களும் நிறைந்திருந்தார்கள். அவர்களில் ஒருத்திக்கு மூன்று நான்கு குழந்தைகள். இதில் கைக்குழந்தை ஒன்று 'வீல் வீலெ'ன்று அலறிக்கொண்டிருந்தது.

பிள்ளை வரம் வாங்க வந்த என் கணவரும் அந்தக் காட்சியைப் பார்த்தார். எங்களுக்கு முன்னால் போய்க்கொண்டிருந்த கூட்டத்தில் ஒரு பெண்மணி தன் குழந்தைக்குப் பால் புகட்டுவதற்காக மண்டபத்தின் படிக்கட்டின் மீது போய் உட்கார்ந்தாள்.

பிச்சைக்காரி என கணவ ரைப் பார்த்து 'ஐயா!' என்று தகரக் குவளையை நீட்டினாள். அதில் காலணா நாணயம் ஒன்று விழுந்தது!

எவ்வளவு தர்ம சிந்தனை! ஐந்து ஜீவன்களுக்குக் காலணாவா? பிள்ளை வரம் வாங்க வந்த என் கணவர்; பிள்ளைகளைப் பெற்றுவிட்டுப் பாலில்லாமல் கதறவிடும் அந்தப் பிச்சைக்காரி; குழந்தையின் தொண்டை உலர்ந்துவிடுமே என்று வலுவில் பாலைப்புகட்டும் அந்தப் பெண்.

சீ! வாழ்க்கையில் எத்தனை விசித்திரங்கள்? கண்ணுக்கு முன்பாக அதுவும் ஆண்டவனுடைய சன்னிதியிலேயே நிகழும் இந்தக் காட்சிகளைக் கண்டதும உடலெல்லாம் சிலிர்த்து விட்டது எனக்கு! உண்மையாகவே உலகத்தில் வாழும் எல்லோருடைய கண்களும் அவிந்துபோய் விட்டனவா? இல்லை வேண்டுமென்றுதான் இந்த மாதிரியான அக்கிரமங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்களா?

நாங்கள் உள்ளே போனோம்!

போகும் வழியில் கூட்டம் அதிகமாகத்தான் இருந்தது. யாரோ ஒரு வாலிபன் என்மீது இடித்துக் கொண்டு போனான். என்கணவருக்கு ஒரேயடியாகக் கோபம் வந்து விட்டது.

"உனக்கு மூளையிருக்கிறதாடா? பெண்களின்மேல் உராய்ந்து கொண்டு ஒய்யாரமாகப் போகிறாயே!" என்றார் படபடப்புடன்.

அவன் மிக அமைதியுடன் என் கணவரைப் பார்த்து"ஏன் கோபித்துக் கொள்ளுகிறீர்கள்? எதிரில் தொங்கும் திரைக்குள் என்ன நடக்கிறதென்பதைப் பாருங்கள்" என்றான். அது அம்மன் இருக்கும் இடம்! உள்ளே அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது! குருக்கள் அதைச் செய்து கொண்டிருந்தார்.

"என்ன நடக்கிறது? அபிஷேகம்!" என்றார் என் கணவர்.

"அதனால்தான் நான் வெளியேறுகிறேன்"

"ஏன்?"

"அபிஷேகத்தின் போது அம்மனுக்கு ஆடைகளே இல்லாமல் நிர்வாணமாய் இருக்கிறாள்; அர்ச்சகர் அழுக்குத் தேய்த்துக் குளிப்பாட்டுகிறார்: தெய்வமே அந்த அநியாயத்தைப் பொறுத்துக்கொண்டு மௌனமாக இருக்கும்போது நீங்கள் மட்டும்—"

அதற்குமேல் அவன் அங்கே நிற்கவில்லை. கூட்டத்தில் புகுந்து மறைந்து விட்டான். சுற்றியிருந்தவர்கள் அவன் போனபிறகு என்ன திட்டுத் திட்டினார்கள் தெரியுமா?

நாங்கள் ராமேசுவரத்திலிருந்து திரும்பினோம. ஒரு கடிதம் வீட்டினுள்ளே விழுந்து கிடந்தது! அவர் அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தார்! அப்பாவின கையெழுத்து அது!

"நீலாவின் அம்மாவுக்கு உடம்பு சௌகரியமில்லை. நீலாவை அழைத்துக்கொண்டு வந்து சேரவும்" என்ற வரிகள் என் கண்களில் தென்பட்டன!

அன்றைய ஒரு நாள் இரவு கழிவது ஒரு யுகமாகத் தோன்றியது! விடிந்ததும் இருவரும் புறப்பட்டு ஊருக்குக்

ளமயினும், பூங்குளம கிரா மம் தான் இப்பொழுதெல்லாம் அப்பாவின் வாசஸ்தலமாகி விட்டது! வீட்டில் அம்மா படுக்கையில் விழுந்து கிடந்தாள். என்னைக் கண்டதும் ஏனோ அவளுடைய கண்கள் நீரைப் பொழிந்தன. "அம்மா!" என்றேன் அவளருகில உட்கார்ந்து கொண்டு! அதற்கு அவள் பதில் பேசாமல் 'வா' என்று தலையை மட்டும அசைத்தாள். என்மனம் தணலாய்க் காய்ந்தது! அப்படியே அவளை அணைத்துக்கொண்டேன்!

அன்றைக்கு இரவே அவளுக்கு வயிற்றில் வலி மூண்டது! வைத்தியர்கள் வந்து பார்த்தார்கள். பயனில்லை! பல பல வென்று பொழுது விடியும தருணத்தில் உடலுக்குள் ஊசலாடிக்கொண்டிருந்த அவளுடைய உயிர் ஓசைப்படாமல் வெளியேறியது!

பிறகு வெகு நாட்கள் வரையில் நான் அம்மாவை நினைத்து அழுதுகொண்டேயிருந்தேன். கணவன் வீட்டிலும், என்மீது கசப்பு உண்டாயிற்று! காரணம் ராமேசுவரம் போன பின்னும் பலன் கிடைக்கவில்லை யென்பதுதான். எப்படிக் கிடைக்கும், கிடைக்க முடியும்?

மெள்ள அவருக்கு இரண்டாம் தாரம் செய்ய வேண்டுமென்று பேச்சுஎழுந்தது! முன்னைப் போல அவர் என்னிடம் அவ்வளவு நெருங்கிப் பழகுவ தில்லை! தொல்லைகள் கணக்கின்றிப் பெருக ஆரம்பித்தன. ஒன்றா, இரண்டா வாய்விட்டுச் சொல்லுவதற்கு?

அப்பாவுக்குக் கடிதம் எழுதினேன். அவர் வந்து என்னை அழைத்துப் போய் விட்டார். கொஞ்சநாட்கள் வரையில் நான் நிம்மதியாக இருந்தேன்; ஆனல் வாலிபத்தின் மயக்கத்தால் விறுவிறுப்புக்கொண்ட என் மனம் சுமமா இருக்குமா? அது அலைபாய ஆரம்பித்தது! அந்த ஒரு விஷயம்-ஒரே விஷயம் மட்டும என் மனத்தில் இடைவிடாது கூத்தாடிக் கொண்டிருந்தது!

என்னைப்பற்றிய விஷயம் ஒருபுறம் இருக்கட்டும்! நான் கணவன் வீட்டைவிட்டு வெளியேறி அப்பாவுடன் வந்திருந்தது ஒருவருக்குமே பிடிக்கவில்லையாம்! கட்டின கணவனைக் கைவிட்ட கொடும்பாவியாம். வாழாவெட்டியாம். ஓடுகாலியாம்; கிராமத்தார்களிடையே எவ்வளவு வசவுகள்; எத்தனை இடங்களில் திண்ணைக் கச்சேரிகள்; அப்பப்பா, காது கொடுத்துக் கேட்க முடியவில்லை; அது மட்டுமா?

அப்பா, சீர்திருத்தப் பிரசங்கியான நிலைதான், இவ்வளவு தாங்கமுடியாத-தலை தூக்கமுடியாத-அவமானங்கள் வந்துவிட்டனவாம! இதையெல்லாம் சொன்னவர்கள் யார்? பிராமணர்களா? இல்லவே இல்லை! நம் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள்; ஒரே நாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள்; எந்த மக்களுடைய அறியாமையையும், அடிமைத்தனைகளையும் தகர்த்தெறிய வேண்டுமென்று அப்பா போராடுகிருரோ அந்த மக்களில் ஒரு பகுதியினர்தான் அப்படிப் பேசினர்கள். அதற்காக அப்பா கோபித்துக்கொள்ளவுமில்லை; தலையைக் கவிழ்த்துக் கொள்ளவுமில்லை; "அட மூட சமுதாயமே! உனக்கு எப்

போகிறதோ?" என்று தான் சிரித்துக் கொண்டே சொல்லுவார்! ஆனால் அதனுடைய கண் திறக்குமா?

'நுண்ணீர், நாட்டுக்கு எவ்வளவு உபயோகப் படுகிறதோ அதைபோல உன் சேவையும் நாட்டுக்கு உபயோகப்பட வேண்டும்; நீ புதிய தமிழ் நாட்டைச் சேர்ந்தவள் அம்மா!' என்ற பெரியாரின் அஃகுச் சொல் என் உள்ளமென்ற உலைக்கூடத்தில் ஓர் வல்லாயுதமாக உருவெடுத்திருந்தது.

அப்பாவிடம் சில நண்பர்கள் வந்து பேசிக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம் "என் இரண்டாம் மனைவி இறந்ததற்காக நான் கண்ணீர் சிந்தவில்லை" என்பார்.

"அப்படியென்றால் உங்களுடைய முதல் மனைவியார், எங்கிருக்கிறார்கள்? எப்பொழுது நீங்கள் முதல் மணம் செய்து கொண்டீர்கள்?" என்று கேட்டால் அவர் கூறும் பதில்தான் இது!

"நான் என்றைக்கு இந்த நாட்டில் பிறந்தேனோ அன்றைக்கே தமிழ் நாட்டை மணம் செய்து கொண்டேன். பிறகுதான் மறுமணம்; இரண்டாந் தாரம் செத்து விட்டாள்; ஆனால் முதல் மனைவி இறக்கவில்லை! அவளுக்குச் சாவே இல்லை. அவளுடைய நோயுற்ற உள்ளத்தைக் கண்டால்தான் கண்ணீர்-இரத்தக் கண்ணீர் விடவேண்டி இருக்கிறது."

என் முதல் அன்னைக்காக அப்பா மட்டும் கண்ணீர்வடிக்கவில்லை! எத்தனையோ ஆயிரக்

வர்கள் கண்ணீர் விட்டார்கள்; ஆனால் அந்த ஊற்றுக் கண்ணைக் கண்டுபிடித்தவர் பெரியார்தான்!

அந்த அன்னையுடன் நான் இரண்டறக் கலந்துவிட்டேன். அவளுடைய அலங்கோல நிலைமையைக்கண்டிருந்தும், மேலும் அவளை ஆபாசப்படுத்தத் துணிந்தார்கள் அப்பொழுது ஆட்சிபீடத்தில் அழுக்குப் படாமல் அமர்ந்திருந்தவர்கள்! 'இந்தி மொழி கட்டாய பாடமாக்கப்பட்டது!' என்ற செய்தி வெளிவந்ததுதான் தாமதம்! தமிழகத்தில் புயல்வீச ஆரம்பித்தது! தமிழர்களுடைய இதயம் குமுறியது! சந்திக்குச்சந்தி சிங்கங்கள் சிறி முழங்கின!

அப்பாவும், நானும் வெளியூர்களுக்குச் சென்றோம்! மேடைப் பிரசங்கங்களே செய்யாத நான் கூட ஒரு பெரிய பேச்சுக்காரியாக மாறிவிட்டேன்.

"பூட்டிய இருப்புக்கூட்டின் கதவு திறக்கப்பட்டது. சிறுத்தையே வெளியில் வா" என்றார் புரட்சிக் கவிஞர். அவ்வளவுதான், வீட்டுக்கு வீடு வில்லேந்தும் புலித்தமிழர்கள் வெளிக் கிளம்பினர். தோளை உயர்த்தினர்; சுடர்முகம் தூக்கினர்; மீசையை முறுக்கி மேலே ஏற்றினர்; விழித்த விழியில், "வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள்" என்று மேதினிக்கு ஒளி பாய்ச்சினர்! நடந்தனர்—சென்னைக்கு! நடத்தினர் மறியலை! ஆண், பெண் குழந்தைகள் எல்லாம் சிறைக் கோட்டத்தை அலங்கரித்தார்கள்! தமிழ்நாடு தமிழருக்கே

வரை ஏறிற்று!

அதிகாரத்தின் அடக்கு முறைச் சட்டத்திற்கு முதன் முதலில் பலியானார் அப்பா! அவரைக் கைது செய்த அதிகாரி கோபமாக அப்பாவை நோக்கி "நீர் ஒரு வகுப்புவாதி அய்யா" என்றார்,

வந்துவிட்டது வெறி அப்பாவுக்கு!

"வகுப்புவாதி! யார் வகுப்புவாதி? நெற்றியில் திருநீறும், திருமண்ணுமிட்டவன் வகுப்புவாதியா? மார்பிலே முப்புரி தறித்தவன் வகுப்பு வாதியா! தொடாதே; தொட்டால் தீட்டு என்பவன் வகுப்பு வாதியா? இந்தக் கொடுமைகள் ஒழிய வேண்டுமென்று சொல்லுகிற நான் வகுப்பு வாதியா? நீரே சொல்லும்" என்றார். ஒன்றும் பலன் இல்லை;

அப்பாவுக்கு ஆறுமாதம் தண்டனை தான் கிடைத்தது; அவர் என்னை விட்டுப் பிரியும் போது "நிலா; நீ புதிய தமிழ் நாட்டைச் சேர்ந்தவள்; கடமையை நிறைவேற்று" என்றே கூறிச் சென்றார்!

இரண்டு தினங்கள் வரையில் நான் பிரசங்கங்களில் ஈடுபட்டேன். மூன்றாவது நாள் அப்பாவுக்குத் துணையாகச் 'சிறைவீடு' என்னையும்சேர்த்துக்கொண்டது!



டனை விதித்தார்கள்! பிறகு தமிழகத்தின் தனிப் பெருந் தலைவரான. பெரியாருக்கும் இரண்டு ஆண்டுகள் அரசாங்க அழைப்புக் கிடைத்தது! அதை அவர் அகமகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்! ஓய்வென்பதையே அறியாது தமிழகத்தின் நாலு பக்கங்களிலும் சுழன்று, சுழன்று வீரகர்ச்சனை புரிந்துவந்த கிழச் சிங்கம், ஓய்வுபெற்றுச் சிறையில் தலை நிமிர்ந்து கிடந்தது!

சில மாதங்கள் சென்ற பின்பு திடீரென்று எல்லா இந்தி எதிர்ப்புக் கைதிகளையும் விடுதலை செய்து விட்டார்கள். தமிழ் நாட்டின் தமிழர்கள் தலை நிமிர்ந்து வெளியேறினார்கள்.

மீண்டும், அப்பாவும், நானும் தமிழகத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தோம்! என் கணவர் மீதிலிருந்த அன்பு, நாளாக. ஆக நாட்டின் பக்தியாக மாறிற்று; பிறகு அவரை நான் சந்திக்கவே இல்லை!

உலகத்தில் ஒரே ஒரு சாக்ரட்டீஸ்; ஒரே ஒரு புத்தர்; ஒரே ஒரு மார்ட்டின லூதர் ஒரே ஒரு மார்க்ஸ் ஒரே ஒரு ரூஸோ ஒரே ஒரு லெனின் ஒரே ஒரு பெரியார் தான் தோன்றுவார்கள்; தோன்ற முடியும், ஆனால் ஒரே ஒரு 'நிலா' மட்டும தான் தோன்றுவாளா அல்லது—நீங்களே சொல்லுங்கள்!



பாரதிதாசன் பரம்பரை

[திரு நா. கு. நமச்சிவாயன் அவர்கள் ஆம்பூர் ஹிந்து உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றுகிறார். "காணவில்லை" என்ற கற்பனைச் சித்திரம் நமச்சிவாயனாரைப் பாரதிதாசன் பரம்பரையில் சேர்த்து வைக்கிறது — ஆசிரியர்]

காணவில்லை

"வான்வெளியிற் செங்கதிரோன் மறையும் வேளை
மலர்ப்பொழிலில் எனைக்காண வருக!" என்று
தேன் மொழியாள் உரைத்ததனைச் சிந்தை தேக்கி
சிறுபொழுதும் தாழ்க்காமல் சென்றேன்; ஆங்கே
கான்அருவிக் கரையினிடை நெளிந்து தோன்றும்
கருமணலின் அழகுகண்டேன்; மதியம் கண்டேன்;
மீன்கண்டேன்; வள்ளையிலை விளங்கக் கண்டேன்;
மெல்லியலாள் அவள்வடிவம் காண வில்லை!

பூங்குமுத மலர்கண்டேன்; பொன்போல் வண்ணப்
புதுக்குமிழப் பூக்கண்டேன்; இளமை மாறு
மூங்கில்கண்டேன்; பசுங்கமுகின் துண்டங் கண்டேன்;
முகங்கொண்ட குரும்பைகண்டேன்;முதிர்வி லாமென்
கோங்கரும்பின் உருக்கண்டேன்; துவளும் வஞ்சிக்
கொடிகண்டேன்; நறுங்காந்தட் குலைகள் கண்டேன்;
தேங்குமெழில் கிளிமூக்குத் திகழக் கண்டேன்,
செறிவளையாள் அவள்வடிவம் காண வில்லை!

"என்அத்தான்! உன்வருகை நோக்கி,நோக்கி
இணைவிழிகள் சோர்ந்தனவே, எதைக்கண் டாலும்
உன்னைத்தான் காணுகின்றேன்; ஒன்றும் கூறு(து)
உளந்திகைக்கக் காரணம்என்? உரையாய்" என்ற
கன்னற்கு நேர்மொழியென் செவியிற் பாயக்
கனவினின்று விழித்தவன்போல் உணர்வுற் றேன்;என்
முன்னிற்கக் கண்டேன்என் உயிரன் னை;
முன்கண்ட பொருளனைத்தும் காண வில்லை!

ஏழையின் வஞ்சம்

நா. கிருஷ்ணமூர்த்தி

மாரியப்பன், நஞ்சையப்ப முதலியாரின் பரம்பரைப் பண்ணை ஆள். மாரியப்பன் உடலில் மலிந்து கிடக்கும் 'மினுமினு'ப்பும், தசைநார்களின் உறுதியும், நெஞ்சுகலமும்; வாழ்க்கையில் எவ்வளவு பெரிய போராட்டங்கள் வந்தாலும், சமாளிக்கக் கூடிய சக்தியும்; "நஞ்சையப்ப முதலியாரின் சோறு" என்றுதான் அந்த ஊர்ப் பொதுமக்கள் பேசிக் கொள்வார்கள்.

'நஞ்சையப்ப முதலியாருதான் நம் பரம்பரைத் தெய்வம்' என்று கொண்டாடிய காலம் மாரியப்பனுக்குண்டு. அந்தக் காலம் அந்தகாரத்திலே விழ்ந்து, அழிந்து, ஆழப் புதைந்துவிட்டது. 'நஞ்சையப்ப முதலி நம் குடும்பத்திற்கு நஞ்சுவார்க்கும வஞ்சகன்' என்று தெரிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பமல்ல; பல் சந்தர்ப்பங்கள் வாய்த்தன.

நஞ்சையப்ப முதலியைக் காணும் பொழுதெல்லாம் அவன் உள்ளம் தீக்குழம்பை வாரி விசிக்கொண்டிருக்கும். 'உள்ளே பகை - உதட்டில் புன்னகையா?' என்று, அவரைக் காணும்பொழுதெல்லாம் நினைத்துக்கொள்வான். அவருடைய அதிகாரக்குரல் எழும் பொழுதெல்லாம் 'அடித்து நொறுக்கு' என்று அவன் மனம் கட்டளையிடத் தயங்காது.

2

அந்திவானம் செந்தியாகக் காட்சி யளித்துக்கொண்டிருந்தது. அதற்குள் உலக மாறுதலைப்போல், அடிவானம் சிறிது கறுக்கத் தொடங்கியது. லேசாக வந்துகொண்டிருந்த காற்று 'திம்'மென்று ஊதிச் சுழற்றியது ஊரையே!

எங்கோ இடித்ததைப்போலிருந்த 'இடி' தலைக்கு நேரே இடிப்பதைப்போல்; கர்ஜிக்கத் தொடங்கியது. ஓரிரு தூற்றலில் ஆரம்பித்தமழை ஊரையே 'ஹதம்' செய்யக் காற்றையும் மின்னல்களையும், இடிகளையும் துணைக்கு அழைத்துக்கொண்டது.

மாரியப்பன் குடிசையில் எரிந்துகொண்டிருந்த அந்தச் 'சிம்னி'யா எரிந்துகொண்டிருக்கப் போகிறது? மாரியப்பன் குடிசையில் 'இருளன்னை' தன் வலையை விரித்துக்கொண்டிருந்தாள். மாரியப்பனின் மனைவி 'செல்வி' தன் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள்! மூன்று நாட்களாக விடாத ஜுரம்; குழந்தையின் உடல் முழுதும் கொதித்துக்கொண்டிருந்தது.

மாரியப்பன், "செல்வி! மழை பெலத்துக்கிட்டா வெளியே ஓடிப்போவோம்.' என்று தன் மனைவி செல்லிக்கு ஆறுதல்

சொல்லிக்கொண்டிருந்தான். மாரியப்பனின் குடிசைக்கு மேலே உள்ள 'கீத்து'க்களைக் காற்று அடிக்கடி தூக்கிக் கொண்டு உள்ளே 'ஜிலு-ஜிலுப்பை' உண்டாக்கியது. அதன் வழியாக மழையும் புகுந்து, பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தது. அதைவிடக் கோரமானது, அவன் குடிசையைச்சுற்றித் தென்னை மரங்கள் வளைந்தாடிக் கொண்டிருந்த காட்சி! 'எந்தச் சமயத்தில் குடிசையின் மேல் விழும்' என்று திட்டமாகச் சொல்ல முடியாது. தென்னந்தோப்புக்குள் குடிசையைக் கட்டி வாழ்ந்து கொண்டிருந்தான் மாரியப்பன். அது அவனுடைய 'முதலாளி'யின் கட்டளை. அதற்குக் கட்டுப்படுவது அவனுடைய கடன்!

கடைசியில்ஒரு தென்னைமரம் முறிந்து விழும் சப்தம்; அவர்கள் உள்ளத்தில் பயங்கர உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. குழந்தையைஅணைத்துக் கொண்டிருந்த செல்லியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு தன் முதலாளியின் வீட்டை நோக்கி நடந்தான்; அந்த மழையில்! அதுவும் ஜுரமாகக் கிடந்த தன் குழந்தையைக் கையிலேந்திக் கொண்டே!

எதையும் கண்டு சிரிக்கும் எத்தர்களைப்போலே, நொந்து போன அந்த உயிர்களின் பார்வையைப் பிடுங்க; மின்னல்கள் போட்டியிட்டன. செல்லிக்கும் மாரியப்பனுக்கும், சிறிது நேரம் கண்களே தெரியவில்லை.

மெதுவாக முதலாளியின் வீட்டை யடைந்து படிக்கட்டில் இருவருமாக ஏறினார்கள். திண்ணையில் சற்று நின்று பார்த்தார்கள். 'சாரல்' திண்ணை முழுவதும் பரவி வியாபித்துக் கொண்டிருந்தது. குழந்தையின் உடல் முன்னை விட அனலாகக் கொதித்தது. மாரியப்பன் உடலும், செல்லியின் உடலும் நனைந்து 'ஜில்' லிட்டுப் போய்விட்டது!

'ஆபத்துக்கு முதலாளி உதவாமலா போய் விடுவார்' என்று கதவைத் தட்டி "குழந்தைக்குக் காச்சலுங்க; இந்தக் குழந்தைக் காச்சும் கொஞ்சம் உள்ளே இடந்தாங்க" என்று எவ்வளவோ கெஞ்சி மன்றாடிப் பார்த்தான்.

நஞ்சையப்ப முதலியின்மனம் இரங்காததற்குக் காரணம் 'மாரியப்பன் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவன்' என்பது தான்! அன்று இரவு முழுவதும் சாரலில் திண்ணையிலேயே நின்றதற்குக் கைமேல் பலனாக அவர்களின் ஒரே குழந்தையை இழக்க நேரிட்டது. இந்தச் சம்பவத்தை மாரியப்

பனுல் எப்படி மறக்கமுடியும்? உணர்ச்சி உள்ளவனுக்கு உயிர் தானு பெரிது? 'தன்னுடைய ஒரே குழந்தையின் சாவுக்குக் காரணம்; தன் முதலாளி தான' என்று திட்டமாக நம்பினுன். அன்று தான் முதலாளிகளின சுய உருவத்தை உணர்ந்தான். அவன் பெருமையாக "எங்க முதலியாரய்யா" என்று சொல்லிக் கொள்வதும் அன்று தான் ஒழிந்தது.

3

செல்வியின் அண்ணன் 'காளியப்பன' செல்வி நோயால் வாடுவதாகக் கேள்விப்பட்டு; செல்வியைப் பார்க்க வந்திருந்தான். என்றுமே வராத தன் மச்சான் காளியப்பனைக் கண்டதும்; அதுவும் "என் உசிரு உள்ள வரைக்கும் செல்வியின புருஷன் வூட்லே காலடிவைக்க மாட்டேன்" என்று 'சபதம்' செய்திருந்த தன் மச்சானைக் கண்டதும் தென்னமரத்திலேறி நான்கு 'இளநீர்' களை வெட்டி வைத்தான்.

சோடிக்காரனுன தன்மச்சான் காளியப்பனை இன்று தன்விடு தேடி வந்திருக்கும்பொழுது; மாரியப்பனுக்கு நான்கு 'இளநீர்'களை வெட்டிவைப்பது குற்றமாகவா தெரியும்?

ரஞ்சையப்ப முதலியார், தன் 'தோப்பில் இருட்டுத்தனமாக தேங்காய்களைப் பறித்துவிற்றுவிட்டான்', என்று மாரியப்பன் மீது சீறி விழுந்துகொண்டிருந்தார். எதுவுமே எதிர்பேசாத மாரியப்பன் அன்று ஆத்திரம் நிரக்கத்தினை வசக்குவாதும் நிகழ்ந்தது.மாரியப்பனின் "எங்

> **பொன்னி விற்பனையாளர்களுக்கு**
>
> அன்புடையீர்!
>
> தூத்துக்குடி மாநாட்டுப் பந்தலில் நமது "பொன்னி" புத்தகக் கடை ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால், அன்பு கூர்ந்து விற்பனையாளர்கள் நேரில் சந்தித்து அறிமுகப் படுத்திக்கொள்ளும் வாய்ப்பினை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.
>
> பொறுப்பாளர்.

கப்பன், பாட்டன் தணனி ஊத்தி வளக்காட்டிப்போனு—இப்பக் காசுவித்துக் கொட்டுவியல்ல" என்ற வார்த்தை முதலியாரின் ஆத்திரத்தைக்கிளறி அதனுலேயே அபிஷேகம் செய்ததுபோலிருந்தது.

விழுந்தது மாரியப்பனுக்குச் சீட்டு. மாரியப்பனுக்கு வேலையில்லை.

இரவு மணி பனிரெண்டிருக்கும்.

முதலியார் அலறிக் கொண்டே பூமியில் உருண்டார்! ரத்தம் அவர் நெஞ்சிலிருந்து பீறிட்டுக்கொண்டிருந்தது. அதற்குள் அங்கே படுத்திருந்த மற்றவர்கள் மாரியப்பனை இறுகச் சேர்த்துப் பிடித்துக்கொண்டார்கள்.

"இனி என்னவேண்டுமானுலும் செய்துகொள்ளுங்கள்; இந்த 'ஏழையின் வஞ்சம்' ஈடேறிவிட்டது" என்று அவன் உள்ளமும், வாயும் ஒரே சமயத்தில் முணு, முணுத்தன!



வளரும் இலக்கியம்

காலச் சக்கரம் ★ ★

(வாரப் பத்திரிகை) சிறு கதைகளும் இன்றையத் தேவையை உணர்த்தும் கட்டுரைகளும், கொண்டுள்ளது இப் பத்திரிகை. உட்பக்கங்களில் பத்திரிகை யமைப்பு பார்ப்பதற்கு அழகாக இல்லை. ஆசிரியர்கள்:- ம. ப. பெரியசாமித் தூரன், கே. எஸ். பெரியசாமி விலை 4 அணா. காலச்சக்கரம் காரியாலயம். த. பெ. 232. கோயமுத்தூர்.

புதிய பாதை ★ ★

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தம்முடைய உணர்வெழுப்பும் நடையிலே, தமிழ், இலக்கியம், அறிவியல், வரலாறு, பொருளாதாரம் முதலிய ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் அடையும் வழியினைச் சொல்லித் திராவிடர்களின் குறிக்கோளையும் கூறி முடிக்கிறார். விலை அணா 12. ஞாயிறு நூற்பதிப்பகம், 28 அம்பலத்தாடு ஐயர் மடத்து விதி, புதுச்சேரி.

அழியட்டுமே திராவிடம் ★ ★ ★

தோழர் துறையூர் நாராயணன் அவர்கள் வீறு சான்ற நடையில் திராவிடம் வாழும் வகை கூறி, இவை நடவாவேல் திராவிடம் அழியட்டும் என்று முழங்குகின்றார். உணர்வெழுப்பிச் சிந்தனையைத் தூண்டும் திறவுகோல் இந்நூல். தமிழனாய்ப்பிறந்த ஒவ்வொருவனும் படித்துப் பயன்பெறவேண்டிய புத்தகம் இது. விலை அணா எட்டுத்தான்! புரட்சிப் பதிப்பகம், துறையூர், திருச்சி மாவட்டம்.

சமதர்மம் ★ ★

அறிஞர் சி. என். அண்ணாத்துரை அவர்களின் நூல்கள் இந்நாட்டின் அறிவுக் களஞ்சியம். ஆனால் எட்டுப் பக்கமுள்ள கட்டுரைக்கு நாலணா விலையில் புத்தகம் போடுவது பெருத்த அநியாயம்தான். திராவிடன் பதிப்பகம், வேலூர் (வ. ஆ.)

அசோகன் காலத்தில் ★ ★

ஆசிரியர் ஏ. எல். அ. மலையப்பன் இந்திச் சனியன் பொது மொழியாக வந்தால் அதில் தமிழுக்கும் பங்குபெறப் போராடுமாறு தமிழர்களை யழைக்கிறார். ஆரிய உறவே வேண்டாம், தனி நாடு காண்போம் என்பவர்களுக்கு இது வேண்டாத கருத்து. பொது மொழியே தேவையில்லை என்னும்போது இது தேவையற்ற பிரச்சினை. நடையில் நல்ல ஓட்டமிருக்கிறது. விலை ஆறணா வள்ளலார் நிலையம் 213, தங்கசாலைத்தெரு. சென்னை 1.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ★ ★

இராவண காவியத்தைத் தந்து திராவிடத்தை அணி செய்த குழந்தையவர்களின்

புதுக்கோட்டைக்குப் பெரியார் வருகை

21—4—48-ம் நாள் மாலை ஐந்து மணிக்குப் பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் புதுக்கோட்டைக்கு வந்தார்கள். 22-4-48-ம் நாள் காலை இவ்வூர்த் திராவிடர் கழகத் தோழர் திரு. திருமலை — காசியம்மாள் திருமணத்திற்குத் தலைமைவகித்துத் திருமண முறை மாற்றத்தின் தேவை பற்றிப் பேசினார்கள். பின்னர் மாலை ஐந்து மணிக்குப் பொன்னி அலுவலகத்தைப் பார்வையிட்டார்கள். கவிஞர்கள் மு. அண்ணாமலை, சாமி பழனியப்பன், நாரா. நாச்சியப்பன் முதலியோர் பெரியாருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். வருங்காலத்தில் இளைஞர்கள் தலைவர்களாக இலங்குவர் என்று பெரியார் வாழ்த்துக்கூறினர்.

பின் அங்கிருந்து, இருபுறமும் சைக்கிளில் கருப்புச்சட்டைத் தொண்டர்கள் விரையத்தோழர் தி. பொ. வேதாசலத்துடன் பொதுக் கூட்டம்நடைபெறும்இடத்திற்குவந்தார். திரு தி.பொ.வேதாசலம் அவர்கள்தலைமை தாங்க பெரியார், திராவிடர் கழகத்திட்டங்களைப்பற்றியும் அவற்றின் தேவையைப்பற்றியும், வலியுறுத்தி அழகாக இரண்டரை மணிநேரம் பேசினர். பதினையாயிர மக்கள் குழுமி அமைதியாக இருந்து அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் பேச்சு முடிந்தபின், சுற்றுப்புறத்திலிருந்து வந்தகாட்டுமக்களும்புதுக்கோட்டை நகரத்திளைஞர்களும் மற்றும் பலரும், அவர்சொல்வதுஉண்மைதான் என்றும், இத்தனை நாட்கள் சிந்தியாமல் இருந்து விட்டோமே என்றும், இனியேனும் திராவிடப் பண்பாட்டைக் காப்பாற்றாது சும்மா இருக்கக் கூடாதென்றும் பலவாறு பேசிக்கொண்டனர். கூட்டம் முடிந்தபின் பெரியார் அவர்கள் காரில் ஏறிச் செல்லும் போது "பெரியார் வாழ்க" என்ற ஒலி விண்ணைப் பிளந்தது.

நூல். சீர்திருத்தம் இன்றியமையாததுதான். ஆனால் ஆசிரியர் காட்டும் எழுத்துக்கள் ஏதோ ஒரு புதுமொழி போலத் தோன்றுகின்றன. விலை அணா 4. வள்ளுவர் பதிப்பகம், பவானி (வழி) ஈரோடு.

கடவுள் முளைத்தார் ★ ★

மனிதனின் மூடத்தனத்திலிருந்து முளைத்த கடவுள், தன்னலக்காரர்களுக்கு எப்படி எப்படிப் பயன்பட்டு வருகிறது என்பதை திரு. ரா. தணலன் அவர்கள் நல்ல எளிய தமிழில் விளக்கியுள்ளார். விலை 0-14-0 எரிமலைப் பதிப்பகம், துறையூர் திருச்சி மாவட்டம்.

பகுத்தறிவியக்கத்தின் பழமை ★ ★

இதன் ஆசிரியர் திரு T. S. ஸ்ரீபால் அவர்கள் ஜைனசமயமே திராவிடரின் சமயமென்றும் ஜைனசமய முதல் தலைவரே திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள 'ஆதிபகவன்' என்றும் கூறுகிறார். அன்பளிப்பு நூல், மகாவீர ஜைன சங்கம். 2/2 பெரிய நாயக்கன் தெரு, சென்னை.

— நா. வேத்தரசன்

வரப்பெற்றோம்

தொழிலாளர்:—(மாதம் இருமுறை) ஆசிரியர் சி. ம. விசுவாசம். விலை 0-1-6 தே. நோபிலி பதிப்பகம், தல்லாகுளம, மதுரை.

நாடக உலகம்: ஆசிரியர் எம். எஸ். முத்துக்கிருஷ்ணன். விலை 4 அணா. தஞ்சாவூர்.

தேசியக் கொடி (உபயோகமுறை) இராம. அரு. விரப்பன்: விலை 0-1-6. மின்னற் பதிப்பகம், தேவகோட்டை.

வணிகர்மன்றம் (திங்கள் இதழ்) ஆசிரியர் இரா. வேங்கடேசன். விலை 2 அணா. 18, நடுக்கல்லுக் காரத்தெரு, திருச்சி.

ஜெயப்பிரகாஷ்—புரட்சி நேசன் விலை 4 அணா. தியாகக் கொடி பதிப்பகம். துறையூர், திருச்சி.

அருள்ஜோதி (மாத வெளியீடு) ஆசிரியர் எம். ஏ. சி. ஜெய் லாணி B. A. அருள்ஜோதி நிலையம், 96 லிங்கிசெட்டித் தெரு, சென்னை 1.

வாக்கிய சைவப் பஞ்சாங்கம். இ. மு. சுப்பிரமணிய பிள்ளை கணித்தது. திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

இனமணி (வாரப் பத்திரிகை) ஆசிரியர் த. வ. மு. மகாலிங்கம் விலை 10 காசு. 75, பெல்பில்டு தெரு. ஈப்போ.

ஈழமணி (திங்கள் வெளியீடு) விபுலானந்தர் நினைவு மலர் ஆசிரியர் க. க. முருகேசபிள்ளை 97, நொறிஸ் வீதி, கொழும்பு.

சிந்தாமணி (மாதமிருமுறை) ஆசிரியர் வ. கோபால். விலை 2 அணா. 73. ஜாபர் சாகிப் தெரு, திருச்சிராப்பள்ளி.

சிரஞ்சீவி (மாத இதழ்) ஆசிரியர் சிரஞ்சிவி. விலை அணா எட்டு. 1/186, மவுண்ட்ரோடு, சென்னை.

தொழிலாளர் விழிப்பு (பாடல்கள்) ஆக்கியோர் P. நாகலக்குமி. அறிவியக்க நூற் பதிப்பகம், 506 A தங்கசாலைத் தெரு, P. T. சென்னை 3. விலை அணா எட்டு.

சமணமும் வள்ளுவரும்

சு. அ. பொற்பனமுத்து

உலகிற்குப் பொது நெறி வழங்கியதும் வழங்குவதும் சமணமக்களின் தூய நெறியாகும். ஆரியர் வருகைக்கு முன் தென்னாட்டிலும் வடநாட்டிலும் வாழ்ந்த திராவிடப்பெருமக்கள் அனைவரும் சமண நெறி வழி வாழ்க்கை நடத்தியவர்களாவர். அக்காலத்தில் தமிழ்த் தாயின் உயர்தனிப் புதல்வராய்த் திகழ்ந்த பேரறஞானியார் திருவள்ளுவர் ஆவர்.

உலகம் போற்றும் உத்தம மறையான திருக்குறளின் சாயல் அனைத்தும் சமண நெறியில் தோய்ந்த தொன்றினலன்றோ இன்று பொதுமறையாகத் திகழ்கின்றது. சமண மதத்தை அலைக்கழித்த ஆரியப் பூச்சிகள் தமிழகத்தில் புராண ஆபாச நஞ்சினைக் கலந்துவிட்ட காரணத்தினுல் தான் திருவள்ளுவனுரின் பெருமையும் இலைமறை காய்போல் இருந்து வரலாயிற்று.

இன்றும், குறளுக்கு உரைகாணுபவர்கள், சைவ, வைணவ, இதர மிற மதப்பித்து கொண்டு வள்ளுவனுரின் உள்ளத்து ஒளியினைக் காணமுற்பட்டுத்தடுமாறுகின்றனர். மக்கள் ஒன்றே - அறநெறியொன்றே என்ற சமண நெறிப் பாதையின் ஒளி மணியெனச் சுடர் விட்டு மிளிரும் திருக்குறளின் பெருஞ் சிறப்பினை மாசுபடிந்த மதத்தினர் காணுதல் இயலுமோ! தூய சமணப் பெரியார்கள் செய்த தமிழ்த் தொண்டின் நலம் பல வற்றையும் ஆராயும் நடுநிலைமைத் தமிழ்ப் புலவர்களால் தான் எந்தை வள்ளுவனுரின் அறநெறிப்பொருள்கள் விளங்கும் என்பது வெள்ளிடைமலை.

தாடி வளர்ந்த கதை

"மௌனி"

குப்பன் குடும்பம் பெரிது. தினசரி அவன் சம்பாதிக்கும் ஒன்றரை ரூபாய்க் கூலி குடும்பச் செலவுக்கே சரியாகப் போகும். கொஞ்சம் கஷ்டமும் கூட. மருதாயி-அவன் பெண்சாதி-சாமர்த்தியமாகக் குடும்பத்தைக் காப்பாற்றிவருவாள். எப்படியாவது ஒரு இரண்டணா சேர்த்துப் பதினைந்து நாளைக்கு ஒரு தரம் முக க்ஷவரம் செய்து கொள்ள அவனுக்குக் கொடுப்பாள். இப்படியாகக் காலம் கழித்து வந்த குப்பனுக்குத் துண்டு காணாமல் போய் விட்டது. என்ன செய்வான் பாவம்! எப்படி வாங்குவான்? பணமேது? மீப்பதற்கு வழியேது? மருதாயியிடம் இதைச் சொன்னான். அவள் துண்டு மறுபடியுமவாங்க ஒருயோசனை சொன்னாள். "ஆறு மாதத்திற்குச் சவரம் செய்து கொள்ள வேண்டாம். அந்தச் சவரச் செலவை மீத்துத் தருகிறேன். துண்டு வாங்கிக் கொள்ளலாம்" என்றாள். அது அருமையர்ன யோசனையாகப் பட்டது குப்பனுக்கு. சரியென்றான். ஆறு மாதமும் முடிந்தது. அவனுக்குத் தாடியும் ஓரளவு வளர்ந்து விட்டது. இருந்தாலும் சின்னத் தாடி தான்.



சிறிய தாடி வளர்ந்ததற்குக் காரணம் துண்டு காணாமல் போனதுதான் என்று தீர்மானித்து விட்டான்.

கடைக்குப் போகும்பொழுது 'திடீர்' என்று அவன் கண்ட காட்சி அவனைத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. உயரமாகவும் நல்ல உருவத்துடனும் வந்த ஒரு பாதிரியார் முகத்தில் ரொம்பவும் நீளமான தாடி அடர்த்தியாக வளர்ந்திருப்பதைக் கண்டு பிரமித்துப்போனான். 'இவர் ஏன் இவ்வளவு பெரிய தாடி வளர்க்கவேண்டும்?" என்ற சந்தேகத்தோடு கலங்கியவனாய், ஓடோடியும் வந்து "சாமி உங்கட்கும் இந்தக் கதி வந்ததா?" என்று அலறிக்கொண்டே பாதிரியாரைக் கட்டிக்கொண்டான். பாதிரியார் திக்குமுக்காடிப் போய் "என்னப்பா சேதி?" என்று விசாரித்தார். குப்பன் "துண்டு காணாமல் போட்டதற்கே எனக்கு இப்படித் தாடி வளர்ந்திருக்கிற தென்றால் தாங்கள் இத்தனை பெரிய தாடியை வளர்த்துக் கொள்ள எவ்வளவு பெரிய வேட்டியைக் காணாமல் போட்டீர்களோ?" என்றான்.

PRINTED BY AR. PERIANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM.

REGD. NO. M. 4649 PUNNI

'பொன்னி' வெளியீடுகள்

திருவள்ளுவரும் திராவிடக்கொள்கையும் — 0—2—0

திருக்குறள் முனிசாமி

அந்நூலில் திருவள்ளுவர் வகுத்த திராவிடக் கொள்கைகளை வெளிப்படையாக அழகுற எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். இதோ திராவிடர் பண்பாடு என்று வீரமுடன் எடுத்துக்காட்டும் அருமையான புத்தகம்.

தேய்ந்த விரல் — 0—4—0

திருக்குறள் முனிசாமி

காதலியின் உள்ளத்தில் எத்தனை இரகசியங்கள் உள்ளன என்று வியந்து, கண்டறியாதன கண்டோம் என்று, படிக்கும் வாசகர்கள் ஒவ்வொருவரும் பேரின்பம் அடைகின்ற காதல் நூல்.

வடலூரும் ஈரோடும் — 0—4—0

திருக்குறள் முனிசாமி

சமய வாதியான வடலூர் இராமலிங்க அடிகள் சமயத்தை வெறுத்து எவ்வாறு ஈரோட்டுப் பெரியாரின் கொள்கைகளை அப்படி அப்படியே பல ஆண்டுகளுக்கு முன் கூறியிருக்கிறார் என்பதை விளக்கும் ஆராய்ச்சி நூல்.

வள்ளுவரும் பெரியாரும் — 0—8—0

திருக்குறள் முனிசாமி

பெரியாரின் அழகிய திருவுருவுடன் வெளிவந்திருக்கும் இந்நூலில், வள்ளுவர் வகுத்த தமிழ் நெறி, பெரியார் வாழ்வில் அமைந்திருப்பதை அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறார் ஆசிரியர். வேகமான நடை. சிந்தனையைக் கிளறும் கருத்துக்கள். படித்து முடித்ததும் பெரியார் தான் இன்றைய வள்ளுவர் என்ற எண்ணம் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும்.

ஈரோட்டுத் தாத்தா — 0—4—0

நாரா. நாச்சியப்பன்

நெஞ்சை அள்ளும் இன்பத் தமிழில் பெரியாரின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கவிதையாக்கித் தந்துள்ளார் தோழர் நாச்சியப்பன். வெறும் வரலாறாய் இல்லாமல் ஆங்காங்கே கற்பனை வளமும் அணிச்சிறப்பும் நூலை அழகு செய்கின்றன. பெரியாரைப் பாடும் முதல் கவிதை நூல் இதுதான்!

கோயில் பெருச்சாளிகள் — 0—6—0

தில்லை வில்லாளன்

கோயிலிலே, காவற்காரன் முதல் காசு வாங்கும் பார்ப்பான் வரை, ஒவ்வொரு பெருச்சாளியும் செய்கின்ற ஆபாச லீலைகளைத் தனக்கென அமைந்த விறுவிறுப்பான தமிழில் அப்பட்டமாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

செந்தமிழ்ப் பதிப்பகம்

தபாற்பெட்டி 39 — புதுக்கோட்டை

WRAPPER PRINTED AT THE SENTHAMIZH PATHIPPAKAM, PUDUKKOTTAI.